


# தமிழரசு

16.10.1995 ரூ.3











திரு. மோசஸ் திலக் - களரிப் பயிற்று

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு - தஞ்சாவூர் - 1995

யாதும் ஊரே யாவரும் கேளிர் !

## நிகழ்ச்சிகளில் சில....

திரு. நா. முத்துசாமி - சவால் நாடகம்



# இந்த இதழில்...


வன உயிரின வார விழா
- மாண்புமிகு முதல்வர் வாழ்த்துச் செய்தி .... 2

'முதலமைச்சரின் பதக்கம்'
வழங்கும் விழாவில்
மாண்புமிகு முதல்வர் உரை ........................ 3

மீனவர் சேமிப்புத் திட்டம்
- மாண்புமிகு முதல்வர் நிதியுதவி.................. 15

அரசுப் போக்குவரத்துக் கழகத்
தொழிலாளர்களுக்குப் போனஸ்............. 16

அண்ணல் காந்தியடிகள்
பிறந்தநாள் விழா ..................................... 17

மதுரையில் உடல்
ஊனமுற்றோருக்கான பள்ளி.................. 22

வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில்
பல்துறைப் பணி விளக்க முகாம் ............ 24

ஏழை எளியோர் ஏற்றம் பெற
கதர் வாங்குவீர்!
- மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர்
திரு பெ. ஈஸ்வரமூர்த்தி .............................. 27

சிறு குடும்பம் போதுமே!
- கவிஞர் வி.மு. உலகநாதன்......................... 31

புதிய கற்கால மக்கள் வாழ்ந்த
இடம் கண்டுபிடிப்பு ................................... 32

கலை உலகம் போற்றும் கலைமாமணி .... 33

எங்கள் கவிமணி
- கவிஞர் குருவிக்கரம்பை சண்முகம் ........... 36

'ஆட்சி மொழி'
- திரு கே. மலைச்சாமி, இ.ஆ.ப., ................ 42




இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

**குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி**
**கணமேயுங் காத்தல் அரிது (29)**

நல்ல பண்புகளாகிய மலையின்மேல் ஏறி நின்ற பெரியோர், ஒரு கணப்பொழுதே ஆயினும் சினம் கொண்டு காத்தல் அரிதாகும்.


# தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2026

புரட்டாசித் திங்கள் : 30

மலர்: 26 இதழ்: 8

16.10.1995

விலை ரூபாய் : 3

ஜெ. ஜெயலலிதா
முதலமைச்சர்

தலைமைச்செயலகம்
சென்னை 600 009.
நாள் 7.10.1995

# வன உயிரின வார விழா - 1995

## வாழ்த்துச் செய்தி

பழங்காலம் தொட்டே தமிழக மக்கள் வனங்களையும் வன விலங்குகளையும் பேணிக்காத்து வந்துள்ளனர் என்பதைச் சங்க நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன. வன உயிரினங்களின் உய்விடமான வனப்பகுதிகள் எந்தக் காரணத்திற்காகவும் பிற பணிகளுக்குப் பயன்படுத்தலாகாது என்பதில் தமிழக அரசு பிற மாநில அரசுகளைவிட உறுதியாக உள்ளது. மொத்த வனப்பகுதியில், வன உயிரின உய்விடப்பகுதி பல மாநிலங்களில் 10 விழுக்காட்டிற்கும் குறைவாக இருக்கும் சூழ்நிலையில் தமிழகத்தில் அதன் பரப்பு 12 விழுக்காட்டிற்கு மேல் உள்ளது என்பதைப் பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகின்றேன். மேலும், கொடைக்கானல் போன்ற சில வனப்பகுதிகளையும் வன உயிரின உய்விடமாக்கத் தமிழக அரசு தனி அக்கறை கொண்டுள்ளது. முன்னோர்கள் பேணிக்காத்து வந்த வனமும், வன உயிரினமும், எந்தக் காலத்திலும் அழிந்து விடக்கூடாது என்ற சீரிய நோக்கம் இந்த அரசுக்கு உண்டு.

வனத்தில் உள்ள அனைத்து உயிரினங்களும் ஒன்றை ஒன்று சார்ந்து வாழ்ந்து வருகின்றன. மனித வாழ்வு வன வளத்தைச் சார்ந்துள்ளது. இயற்கைச் சமன்பாட்டில் மனிதனும் ஓர் அங்கமாக உள்ளான். இந்தச் சூழலில், எந்த வன உயிரினத்திற்கும் ஏற்படும் தீங்கு மனித சமுதாயத்தை நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கும். எனவே, வன உயிரினங்களைப் பாதுகாக்க அனைவரும் சீரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற எனது பேரவாவினைத் தெரிவித்து, வன உயிரின வார விழா சிறப்புடன் நடைபெற எனது மனமார்ந்த வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

ஜெ. ஜெயலலிதா

ஜெ. ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்



# “காவலர்களுக்கு, அரசாங்கம், ஒரு பாதுகாப்புக் கேடயமாக விளங்குகிறது”

## ‘முதலமைச்சரின் பதக்கம்’ வழங்கும் விழாவில் மாண்புமிகு முதல்வர் பெருமிதம்

அட்டை சொல்லும் செய்தி

- ☆ அமரர் ராஜீவ்காந்தி அவர்களுடன் வீர மரணம் அடைந்த 9 காவலர்களின் நினைவாக ஸ்ரீபெரும்புதூரில் ஒரு இலட்சம் ரூபாய் செலவில் நினைவிடம் அமைக்கப்படும்.
- ☆ சென்னை நகரத்தில் அனைத்து அடிப்படை வசதிகளுடன் 3,000 காவலர் குடியிருப்புகள் கொண்ட ஒரு காவல் நகரம் (Police City) உருவாக்கப்படும்.
- ☆ கோவை மாநகரில் படிப்படியாக எல்லாக் காவல்துறைப் பணியாளர்களுக்கும் குடியிருப்புகள் கிட்டதட்ட 20 கோடி ரூபாய் செலவில் கட்டித்தரப்படும்.

**த**மிழகத்தின் தனிப் பெரும் நகரங்களில் ஒன்றாகவும், தொழில் துறையில் தென்னிந்தியாவின் Manchester என்ற சிறப்பினையும், புகழினையும் பெற்ற மாநகரமாகவும், அடக்கம், வீரம் போன்ற, பழந் தமிழர் பண்பாட்டுச் எளிமை, சிறப்புகளைத் தன்னகத்தே



கொண்டு விருந்தோம்பலுக்குத் தன்னிகரற்று விளங்கும் கொங்கு தமிழ் கொஞ்சி விளை யாடும், கோவை மாநகருக்கு வருகை தந்துள்ள பெருமக்களை என் மீது அளவிலா அன்பும், எல்லையில்லாப் பாசமும் கொண்ட, இப்பகுதி வாழ் பெருமக்களை, இங்கே ஒருங்கே காண்பதில், நான் பெருமகிழ்ச்சி யும் பேருவகையும அடைகிறேன். தமிழகக் காவல்துறை, சிறைத் துறை, தீயணைப்புத்துறை மற்றும் ஊர்க்காவல் படை ஆகியவற்றைச் சேர்ந்தவர்களின் சீரிய சேவைக்காகவும், சிறப்பு மிக்க செயல்களுக்காகவும் முதலமைச்சரின் பதக்கங்களைத் தமிழக மக்களின் சார்பில் வழங்கியதில், எனது மகிழ்ச்சி இரட்டிப்பாகி உள்ளது.

தங்களது சீரிய பணியாலும், கடமை உணர்ச்சி மிக்க செயலாற்றலாலும், இன்று பதக்கங்களைப் பெற்ற வீரர் களுக்கும், வீராங்கனைகளுக்கும், எனது நெஞ்சம் நிறைந்த பாராட்டுக்களையும், இதயம் கனிந்த வாழ்த்துக்களையும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

நாட்டு மக்களின் உயிரையும், உடைமைகளையும் பாதுகாத்துச் சட்டம் ஒழுங்கை அன்றாடம் நிலைநாட்டி, நல்லோரைக் கொடியோரின் பிடியிலிருந்து காப்பாற்றி, கொடியவர்களைச் சட்டத்தின் பிடியில் சிக்க வைத்து, அதன் மூலம் மக்கள் அனைவரும், அவரவருக்கு உரிய பணிகளை மேற்கொள்ள, தகுந்த அமைதியான சூழ்நிலையை, உருவாக்கித் தருகின்ற மாபெரும் கடமை, காவல்துறைக்கு உண்டு. அதேபோன்று, தமிழக மக்களைப் பல்வேறு இன்னல் களிலிருந்து காத்து, அரும்பணி ஆற்றும் கடமை, சிறைத்துறை, தீயணைப்புத்துறை மற்றும் ஊர்க்காவல் படைக்கும் உண்டு.

காவல்துறை என்றாலே, நமது மனதில் முதலில் தோன்றுவது, அவர்களது மிடுக்கான தோற்றமும், சட்டத்தை நிலைநாட்டும் கடமை உணர்வும் தான். அரசுத் துறையில் மற்ற பிரிவுகளில் பணியாற்றுவோர் சில பிரச்சினைகளையும், இடையூறு களையும் சந்திக்க நேர்ந்தாலும், காவல்துறையில் பணிபுரிப வர்கள், எதிர்கொள்ள வேண்டிய அளவிற்கு, சவால் களையும், சங்கடங்களையம், ஆபத்துக்களையும், அசாதாரண சூழ்நிலைகளையும், அனுதினமும் சந்திப்பது இல்லை. மற்ற பணிகளில் இருப்போர், இன்னல் களையும், சவால்களையும் ஒரு சில நேரங்களில் மட்டுமே, எதிர்கொள்ள வேண்டி இருக்கும். ஆனால், காவல்துறை வீரர்களும், வீராங்களைகளும், எந்நேரமும் அபாயத்தை எதிர் நோக்கியே, பணிபுரிய வேண்டி யுள்ளது. இன்றைய சூழ் நிலையில், காவல்துறையின ருடைய பொறுப்பும், கடமையும்

கூடியுள்ளன. அதே நேரத்தில், அவர்களது பணியின் கடினமும், ஆபத்தும் அதிகரித்துள்ளது.

மக்களின் உயிரையும், உடைமைகளையும், பாதுகாக்கும் பணியில் ஈடுபடுபவர்களுக்கு, மக்கள் பாராட்டு அளிப்பது இயல்பு தானே? அந்த வகையில் தான் 6 கோடி தமிழக பெருமக்களின் பிரதிநிதியாக இன்று நான் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்கின்ற முறையில், காவல்துறை, தீயணைப்புத்துறை, சிறைத்துறை, மற்றும் ஊர்க்காவல் படையைச் சேர்ந்த வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும், பதக்கங்களை வழங்கிக் கௌரவித்துள்ளேன். காவல் துறையினர், மேலும் சிறந்த பணியைத் தமிழக மக்களுக்கு அளிக்க தங்களை அர்ப்பணித்துக் கொள்ள, இந்தப் பதக்கங்களும் பாராட்டுக்களும், ஊக்கம் அளிக்கும் என்பது உறுதி.

ஒரு காலத்தில், Scotland Yard-க்கு நிகரான பெயரையும், புகழையும் பெற்றிருந்த தமிழகக் காவல்துறை, இடைப்பட்டக் காலத்தில், சில தடங்கல்களுக்கும், சங்கடங்களுக்கும் ஆளாக வேண்டி வந்தது. அத்தகைய காவல்துறை மீண்டும் புதிய பொலிவினையும் ஏற்றத்தையும் பெற வேண்டும் என்று பதவி ஏற்ற முதல் நாளே, நான் ஒரு சூளுரையை மேற்கொண்டேன்.

காவல்துறை, நலிந்தவர்களுக்கும் சட்டத்தை மதிப்போருக்கும் அன்புக் கரம் நீட்ட வேண்டும். கொடியவர்களுக்கும், சட்டத்தை, உடைப்போருக்கும், இரும்புக்கரம் காட்ட வேண்டும், என்பதே எனது எதிர்பார்ப்பு அந்த எண்ணங்களைச் செயல்படுத்த காவல்துறையின், இந்தக் காலத்திற்கு ஒவ்வாத பழைய ஆயுதங்களையும், சாதனங்களையும், கடைப்பிடிக்கும் பழைய நடைமுறைகளையும், முறைப்படுத்தப்படாத திறமைகளையும், பழங்காலப் பயிற்சி முறைகளையும் மாற்றியமைக்க வேண்டும் என்பதை அறிந்து, காவல்துறையை நவீனப்படுத்தத் திட்டமிட்டேன். அதே நேரத்தில், காவல்துறையின் சேவைகள், மக்களுக்குச் சென்றடைய நல்ல மனப்பான்மையையும், மக்கள் நல் எண்ணத்தையும், காவலர்கள் மத்தியில் வளர்க்க வேண்டும் என்றும் விரும்பினேன்.

எனவே தான், காவல் துறையை நவீனமயமாக்கும் அதே நேரத்தில், அதை மனிதாபிமானமிக்க ஒரு இயக்கமாகவும் மாற்ற, எங்கள் அரசு மிகுந்த ஈடுபாட்டுடன், திட்டங்களைச் செயல்படுத்தத் தொடங்கியது. கடந்த 4 ஆண்டு காலத்திற்கு மேலாக, காவல் துறையை நவீனமயமாக்க தமிழக அரசு, நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களைச் செலவு செய்துள்ளது. புதிய பணியிடங்கள் தோற்றுவித்தல், புதிய பணியாளர்கள் நியமனம், காவல் நிலையங்களுக்கு வாகனங்கள் வழங்குதல், நவீன ரகத் துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்கள் அவற்றை இயக்க முறையான பயிற்சி, நவீன தொலைத் தொடர்புச் சாதனங்கள் அலுவலகக் கட்டடங்கள், காவலர்களுக்கு வீட்டுவசதி மற்றும் பல்வேறு அவசியச் சலுகைகள் என்று காவல்துறையின் வளர்ச்சிக்கு, ஒன்றன் பின் ஒன்றாக, பல திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றிக் காட்டியது உங்கள் அன்புச் சகோதரியின் அரசு தான் என்பதைப் பெருமிதத்துடன் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டுள்ளேன்.

ஓர் அரசு, வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்தி, மாநிலத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்றால் அங்கே பொது அமைதி நிலவ வேண்டும். அத்தகைய நல்ல சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்பதில் காவல்துறையினுடைய பங்கு மிக முக்கியமானதாகும். சீர்கெட்டுக் கிடந்த தமிழகத்தின் சட்ட அமைதிப் புரட்சியின் விளைவாக பல்வேறு துறைகளில் தமிழகம் இன்று தன்னிறைவைப் பெற்று வருகின்றது. எனது எதிர்பார்ப்புகளுக்கு ஈடு கொடுத்து, செயலாற்றி வரும் காவல்துறையினருக்கு எனது இதயம் கனிந்த பாராட்டுதல்களை, உரித்தாக்கிக் கொள்கிறேன்.

> ✪ நமக்கு நாமே சொல்ல முடியாத ஒன்றை எவனால் சொல்ல முடிகிறதோ, அவனே நமக்கு விலை மதிப்பற்ற நண்பனாவான்.
>
> —எமர்சன்
>
> **'அன்பு' தான் உலகிலேயே மிகவும் மலிவான பொருள். அது, தன்னைப் பெறுபவருக்கும் வழங்குபவருக்கும் அதிகமான இன்பத்தை வழங்கும்.**
>
> – இங்கர்சால்



நவீன அறிவியல், மற்றும் தொழில் நுட்ப முன்னேற்றத்தினாலும், தொடர்ந்து நிகழ்ந்து வரும் அரசியல், பொருளாதார மற்றும் சமுதாய மாற்றங்களினாலும், இன்றைய அளவில் மனித சமுதாயம், இதுவரை எந்தக் கால கட்டத்திலும் எதிர் கொள்ளாத அளவிற்குப் புதிய பிரச்சினைகளையும், சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இத்தகைய சமுதாய மாறுதல்கள் நிகழ்கின்ற போது, முதலில் பாதிப்புகளுக்கு உள்ளாகும் அரசுத்துறை, காவல்துறை தான். பல்வேறு பிரச்சினைகளை, உள்ளடக்கிய ஒரு சமுதாயத்தில் பொது அமைதியும், சட்டம் ஒழுங்கும், காவல்துறை மூலம், நிலை நாட்டப்பட்டால் தான், சமுதாயமும் அதிலே வாழ்கின்ற மக்களும், புதிய மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து, இயல்பான வாழ்க்கையை மேற்கொள்ள இயலும். ஆகவே, காவல் துறையில் பணியாற்றுவோர் தாங்கள் வாழ்கின்ற சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய சேவையின் தன்மையை அறிந்து, பொது மக்கள் போற்றுகின்ற வண்ணம், பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கான அனைத்து முயற்சிகளையும், நீங்கள் எடுக்க வேண்டும் என்று உங்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப, சீரிய முறையில் மக்கள் பணியாற்ற, தமிழகக் காவல் துறையை நவீனமயமாக்கவும் இந்தியாவிலேயே, ஏன் உலக நாடுகளிலேயே ஒரு சிறந்த காவல்துறையாக, தமிழகக் காவல்துறை பரிணமிக்க நாங்கள் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றோம்.

காவல்துறையினர் மேற்கொள்ள வேண்டிய ஆபத்தான பணிகளையும் அவர்கள் எதிர் கொள்ள வேண்டிய சங்கடமான சூழ்நிலைகளையும் கருத்தில் கொள்ளாமலே காவல்துறையின் மீது, ஒட்டுமொத்தமாக, பழி போட்டு வந்த சூழ்நிலை, இன்று மறைந்துவிட்டது. காவல் துறையினரின் பணி ஆர்வத்தை உயர்த்தவும், அவர்களது நல் வாழ்விற்கு வழி வகுக்கவும், காவலர்களுக்கு அரசாங்கம் ஒரு பாதுகாப்புக் கேடயமாக விளங்குகிறது என்பதையும் எங்கள் செயல்பாடுகள் சந்தேகமற நிரூபித்துள்ளன.

காவல்துறையினரின் பொது நலனைக் கருத்தில் கொண்டு நாங்கள் செயல்படுத்தி வரும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் இன்று இந்தியத் துணைக் கண்டத்திற்கு முன்னோடியாக, வழிகாட்டியாக விளங்கி வருகின்றன. காவலர்களின் மனச் சோர்வை நீக்கி, பணி உற்சாகம் ஏற்படுத்திடவும் அவர்களுக்குச் சமூகப் பாது

காப்பை அளித்திடவும் நாங்கள் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக, இன்று காவலர்கள் நிம்மதியான மனதுடன் சஞ்சலம் ஏதுமின்றிப் பணியாற்றுகின்ற நல்லதொரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. காவல்துறையின் முழு சேவையும் இன்று பொதுமக்களுக்குக் கிடைக்க இந்தத் திட்டங்கள் வழி வகுத்துள்ளன என்பதைப் பலரும் ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

காவலர்களை வெறும் கருவிகளாக, இயந்திரங்களாக நினைத்து, காவல்துறை இயக்கப்பட்ட நிலை, இன்று அடியோடு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. காவலர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும், பணி உயர்வுக்கும் சமூகப் பாதுகாப்பிற்கும், சமூகத்தில் ஒரு அந்தஸ்திற்கும், கடந்த 4 ஆண்டுகளுக்கு மேலாக, உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எண்ணில் அடங்கா!

இருப்பினும், அவற்றில் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டுவது எனது கடமை என்று கருதுகிறேன்.

காவல் பணியின் தன்மை காரணமாக உடல்நலம் பாதிக்கப்பட்ட, 93 காவல்துறை அலுவலர்கள், மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு, ஒரே நேரத்தில் 33.5 இலட்சம் ரூபாய் நிதி உதவி என்னால் வழங்கப்பட்டது. இந்தியத் துணைக் கண்டத்திலே, இது போன்ற ஒரு நிகழ்ச்சி நிச்சயமாக இதற்கு முன்பு, நடந்திராது என்பது உறுதி. கடமை ஆற்றும்போது

> ★ **இன்பமும், துன்பமும் பணத்தைச் சார்ந்தவை அல்ல. மனத்தைச் சார்ந்தவை.**
>
> —பெர்னாட்ஷா
>
> **இணைபிரியாத்தோழர்கள்**
>
> ★ **உண்மையும் உழைப்பும் உங்களுக்கு இடைவிடாத தோழர்களாய் இருக்கட்டும்.**
>
> —பிராங்க்ளின்

பல்வேறு சூழ்நிலைகளில் உயிர் இழந்த காவலர்களின் குடும்பங்களுக்கு நடைமுறைப்படி வழங்கப்பட வேண்டிய நிதி உதவிகளோடு மேலும் ஒரு இலட்சம் ரூபாய் "முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து" வழங்கப்பட்டு வருகின்றது. குறைந்த பட்சம் இரண்டரை இலட்சம் ரூபாய்க்கான நிதியை, அந்தக் குடும்பங்கள் விரைவில் பெறுகின்ற ஒரு சூழ்நிலை, எனது நேரடி ஆணையின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சமீபத்தில் காவல் துறையினருக்கான சிறப்பு மருத்துவச் சிகிச்சைத் திட்டம் ஒன்று 50 இலட்சம் ரூபாய் மூல நிதியுடன் தமிழக அரசால் தொடங்கப்பட்டுள்ளது இந்த நிதியிலிருந்து பெறப்படுகின்ற வருவாயிலிருந்து காவல்துறையைச் சேர்ந்தவர்களுக்குத் தனியார் மருத்துவமனைகளில் செலவினம் அதிகமிக்க உயர்தர மருத்துவச் சிகிச்சையை மேற்கொள்ள நிதி உதவி வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பணியின் தன்மையைக் கருதி, காவல்துறையில் பணியாற்றும் 40 வயதைக் கடந்த காவலர்களுக்கு, கட்டாய மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அவர்கள் உடல் நலத்தை மேலும் பேணிப் பாதுகாப்பதற்கான திட்டத்தின் முதல் கட்டப் பணி என்னால் ஏற்கெனவே, சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டபடி சமீபத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

4.8.1995 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒரு ஆணையின் மூலமாக 1,700 Naik நிலை பதவிகளில் உள்ளவர்களுக்கு, முதல் நிலைக் காவலர்களுக்குரிய பதவி உயர்வும், ஊதிய விகிதமும் வழங்கப்பட்டுள்ளன. இது போன்று, காவல்துறையினரின் நலம் காக்க வேறு எந்த அரசும், செய்திராத பல்வேறு பணிகளை, முனைப்புடன் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு செயல்படுத்தி வருகிறது.

1990-91-ஆம் ஆண்டு காவல் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி 236 கோடி ரூபாய் மட்டுமே. அந்த ஒதுக்கீடு 1995-96-ஆம் ஆண்டு 420 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. காவல்துறையின் முன்னேற்றத்தில், இந்த அரசு, உங்கள் அரசு கொண்டுள்ள, உறுதியையும் ஈடுபாட்டையும் இது தெளிவாக்கும் என்று கருதுகிறேன். முன்பிருந்த ஆட்சியில் கலைக்கப்பட்ட காவலர் வீட்டு வசதிக் கழகம், மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு அதன்மூலம் ஆண்டொன்றிற்கு 1,000 வீடுகள் கட்டப்படுகின்றன. சென்னை நகரத்தில், அனைத்து

அடிப்படை வசதிகளுடன் 3,000 காவலர் குடியிருப்புகள் கொண்ட ஒரு காவல் நகரம் Police Cityஐ விரைவில் உருவாக்கிட ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு, காவல்துறையினருக்குத் தேவைப்படும் ஆயுதங்களைப் பெற்றுத் தருவதிலாகட்டும் தொலைத்தொடர்புச் சாதனங்களைப் பெற்றுத் தருவதிலாகாட்டும், எங்கள் ஆட்சியைப் போல் வேறு எந்த ஆட்சிக் காலத்திலும் செய்யப்படவில்லை என்பதை உறுதியாகக் கூற முடியும். Digital Trunk Radio System மூன்று கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துக்குப் பயன்படாத நிலையில் இருந்த, 384 வாகனங்களை ஒரே நேரத்தில் மாற்றம் செய்து அவற்றிற்குப் பதிலாகப் புதிய வாகனங்கள் வாங்க, ஆணை பிறப்பிக்கப் பட்டது. ஒரு துறையில் உள்ள 384 வாகனங்களைக் கழித்து, புதிய வாகனங்களைப் பெறுவதற்குச் சாதாரணமாகப் பல ஆண்டுகள் ஆகும்.

தமிழ்நாட்டில் அமைக்கப் பட்ட "அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்" இன்று சமுதாயத்தில், ஒரு புதிய விழிப்புணர்ச்சியையும் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தி இருக்கின்றன. இந்தச் சாதனையை இன்று இதர மாநில அரசுகள் பாராட்டுவதோடு, தங்களது மாநிலத்திலும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, அமைத்து வருகின்றன. ஏன், சில அண்டை நாடுகளும், அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, தொடங்கி வைத்துள்ளன என்றால், அது நமது முயற்சிக்குக் கிடைத்த மாபெரும் பாராட்டு என்றே நான் கருதுகிறேன்.

57 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், தமிழகத்தில் செயல்படும் நல்லதொரு சூழ்நிலையை எண்ணி நான் மன மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியாவில் முதன் முறையாக, Victims Assistance Fund - பாதிப்புக்குள்ளானோர் உதவி நிதி ஒன்று ஒரு கோடி ரூபாய் செலவில் தமிழக அரசால் சமீபத்தில் ஏற்படுத்தப் பட்டுள்ளது. கொலை, கற்பழிப்பு, போன்ற பெரும் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, இத்திட்டத்தின் மூலம் மறுவாழ்வு அளிக்கவும், நிதி உதவி வழங்கவும், முனைந்துள்ள ஒரே அரசு தமிழக அரசு தான்என்பதைப்பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை மாநகர்க் காவல் பிரிவில் பணியாற்றும், 1,969 பணியாளர்களில், 773 பேர் மட்டுமே, அரசுக் குடியிருப்புகளில் வசித்து வருகிறார்கள், என்பதையும் மற்றவர்கள் அரசு வழங்குகின்ற வீட்டு வாடகைப் படியைப் பெற்றுக்கொண்டு தனியார் வீடுகளிலும் குடியிருப்புகளிலும் அதிக வாடகை கொடுத்துத் தங்கி வருகிறார்கள் என்பதையும் நான் அறிவேன். கோவை மாநகர் பகுதிகளில் தனியார் வீடுகளின் வாடகை அதிகரித்து வருவதால், காவலர்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமத்தையும் நன்கு புரிந்து கொண்டுள்ளதால், அவர்களது குறைகளை நீக்கி, கோவை மாவட்டத்தில் விரைவில், கூடுதலாகக் காவலர் குடியிருப்புகள் கட்டித் தரப்படும் என்பதையும் கோவை மாநகரில் படிப்படியாக, எல்லாக் காவல் துறைப் பணியாளர்களுக்கும் குடியிருப்புகள் கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய் செலவில் கட்டித்தரப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை மாநகரத்தின், பல்முனை வளர்ச்சியின் விளைவாக, இந்த மாநகரத்தில் புழக்கத்தில் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. வாகனங்களின் போக்குவரத்தை முறைப்படுத்தவும், போக்குவரத்தைச் சீர்படுத்தவும், குற்றத்தடுப்புப் பணியைச் சீரிய முறையில் மேற்கொள்ளவும் கோவை மாநகரத்தில் சுற்றுக் காவல் பணியை மேற்கொள்ள கூடுதலாக வாகனங்கள் விரைவில் வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல்துறையினர் மேற்கொள்ளும் கடுமையான பணிகளின் போது, காவல்துறையினர் பல சமயங்களில் தங்கள்

**நல்லதை நினைப்போம்!**

**★ நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ அதுதான் நடக்கும்.**

**—விவேகானந்தர்**




இன்னுயிரையும், தியாகம் செய்கின்ற சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. மக்கள் நலம் காக்க, தங்கள் இன்னுயிரை அர்ப்பணித்த, நல்லவர்களின் தியாகம், என்றென்றைக்கும் சரித்திரமாக நிலைத்து நிற்க, இனி நினைவிடங்கள் அதாவது Memorial-கள் கட்டுவது என்ற கொள்கை முடிவை எடுத்துள்ளோம் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென, தேவையான நிதி ஒதுக்கீடும் செய்யப்படும். இந்தக் கொள்கை முடிவின்படி, முதல் கட்டமாக, மறைந்த பிரதமர் அமரர் ராஜீவ் காந்தி அவர்களுடன், வீர மரணம் அடைந்த 9 காவலர்களின் நினைவாக, ஸ்ரீபெரும்புதூரில் ஒரு இலட்சம் ரூபாய் செலவில், ஒரு நினைவிடம் - Memorial-கட்டப்படும் என்பதையும் 9.4.1993 அன்று, சந்தனக் கடத்தல் வீரப்பன் வைத்த கண்ணிவெடி விபத்தில், வீர மரணம் அடைந்த 5 காவலர்கள், மற்றும் 2 வனக் காவலர்களின் தியாகத்தை நினைவுகூரும் வண்ணம், 50,000 ரூபாய் செலவில் ஒரு நினைவிடம் கட்டப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். பொது நன்மைக்காக, தங்களது விலைமதிக்க இயலாத உயிரை அர்ப்பணித்தவர்களுக்குத் தமிழக மக்கள் என்றென்றும் நன்றி பாராட்டுவார்கள் என்பதை இந்த நினைவிடங்க்ள் எதிர்காலச் சந்ததியினருக்கு எடுத்துக் காட்டும், என்று உறுதியாக நம்புகிறேன்.

1990-ஆம் ஆண்டு காவல்துறையில் பணியிலிருந்த பணியாளர்களின் எண்ணிக்கையை, 1995-ஆம் ஆண்டில் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிட்டு நோக்கும்போது எந்த அளவிற்கு இன்று காவல்துறை வளர்ந்துள்ளது என்பது புலனாகும்.

1990-ஆம் ஆண்டு, 73 காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் மட்டுமே, செயல்பட்டு வந்தனர். அந்த எண்ணிக்கை இன்று, 94 ஆக உயர்ந்துள்ளது. அதேபோல், 1990-ஆம் ஆண்டு, 44 என்ற நிலையில் இருந்த, கூடுதல் காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கை, இன்று 72-ஆக உயர்ந்துள்ளது. காவல்துறை துணைக் கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கை 357-லிருந்து 519-ஆகவும், காவல்துறை ஆய்வாளர்களின் எண்ணிக்கை, 1,441-லிருந்து 1,855-ஆகவும், உதவி ஆய்வாளர்களின் எண்ணிக்கை, 4,587-லிருந்து 5,139-ஆகவும், தலைமைக் காவலர்களின் எண்ணிக்கை, 6,750லிருந்து 9,772 ஆகவும் முதல் நிலை காவலர்களின் எண்ணிக்கை 5,878-லிருந்து, 23,411 ஆகவும் உயர்ந்துள்ளன என்பதை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்த நான்கு ஆண்டுகளில், காவல்துறை அடைந்துள்ள பரிணாம வளர்ச்சியின் பரிமாணங்கள் எளிதில் புரியும் என்று நம்புகிறேன்.

மிகச் சிறிய வயதிலேயே, மாற்றாரின் உயிரைக் காப்பாற்றுகின்ற, வீர தீரச் செயல்களில் ஈடுபட்டு அரிய சாதனைகளைப் புரிந்தவர்களுக்கு

ஒவ்வொரு ஆண்டும் "அண்ணா விருது'' தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகின்றது. சில நேரங்களில் அத்தகையவர்கள் அடுத்தவர்களின் உயிரைக் காப்பாற்றுகின்ற முயற்சிகளில், நிரந்தரமாக ஊனமாகிவிடுகின்ற சூழ்நிலைகள் கூட, ஏற்படுவது உண்டு. அவர்களுக்கு வெறும் பதக்கங்களும், நிதி உதவியும் கொடுப்பதோடு மட்டும் நின்று விடாமல், அவர்களின் எதிர் காலத்திற்குப் பயன் உண்டாகும் வண்ணம், மருத்துவக் கல்வி, பொறியியல் கல்லூரி, விவசாயக் கல்வி போன்ற எல்லாத் தொழில் நுட்பக் கல்விகளைப் பயில, வருகின்ற கல்வி ஆண்டு முதல் தனியே இட ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை இந்த நல்ல நேரத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வீர தீரச் செயல்களுக்குப் பெயர் பெற்ற காவல்துறையின் திருவிழாவான, இந்த இனிய நாளில் அண்ணா விருது பெற்றவர்களுக்கு, இந்தப் புதிய சலுகையை நான் அறிவிப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால், கோயம்புத்தூர் கணபதி கிராமத்தில் கட்டி வழங்கப்பட்ட குடியிருப்புகளை வாங்கி அதில் வசித்து வரும் ஒய்வு பெற்ற காவலர்கள் ஒரு கோரிக்கையை இன்று என்னிடம் கொடுத்துள்ளார்கள். 1986–ஆம் ஆண்டு கழகத்தால் நிர்ணயிக்கப்பட்ட வீட்டின் மதிப்பைத் தாங்கள் கட்டி முடித்த பின்பு, கிட்டத்தட்ட 10 ஆண்டுகள் கழித்து பத்திரப் பதிவு செய்யும் போது, இன்றைய மார்க்கெட் நிலவரப்படி, பத்திரப் பதிவுக் கட்டணம் Stamp duty செலுத்தக் கட்டாயப் படுத்தப்படுவதாகவும், எனவே, பழைய மதிப்பின் அடிப்படையில், பத்திரப் பதிவு செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள் ளார்கள்.

ஒய்வு பெற்ற காவலர் களின் இந்தக் கோரிக்கையை, முழுமையாக ஏற்றுக் கொண்டு, கணபதி கிராமத்தில் காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் கட்டப்பட்ட, 432 வீடுகளுக்கு, 1986–ஆம் ஆண்டு நிர்ணயித்த வீட்டு மதிப்புப்படி, ஏற்கெனவே பணம் செலுத்தியவர்கள், கூடுதலாகப் பத்திரப் பதிவுக் கட்டணம் எதுவும் கட்ட வேண்டியதில்லை என்பதை அறிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

அந்த வீட்டிற்கான பழைய மதிப்பையே, பத்திரப் பதிவின் போது கணக்கில் கொள்ள வேண்டும் என்று விரைவில் ஆணை வழங்கப்படும். இதனால் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 20,000 ரூபாய் வரை கட்ட வேண்டிய கூடுதல் பத்திரப் பதிவுக் கட்டணத்திலிருந்து, விலக்குக் கிடைக்கும். ஒய்வு பெற்ற பின்பு கூட, காவலர் களுக்கு உதவிக்கரம் நீட்ட எங்கள் அரசு என்றைக்கும் தயாராக உள்ளது என்பதை, இந்த நிகழ்ச்சி எடுத்துக்காட்டும் என்று நம்புகிறேன்.

காவல்துறையிடம் அதிக மான சேவையையும், நல்ல பணியையும், பொதுமக்கள் எதிர்பார்ப்பதால் தான், தாங்கள் எதிர்பார்த்த சேவை, கிடைக்க

> ★ சமுதாயத்தைப் பின்பற்றி மனிதன் அடக்கமாகப் பணியாற்ற வேண்டும்.
>
> –அண்ணல் காந்தியடிகள்

வில்லையே என்ற ஆதங்கம் அவர்கள் மனதில் எழுகின்றது.

மக்களுடைய எதிர்பார்ப்பு களுக்கும், நம்பிக்கைக்கும் ஈடு கொடுத்து, நீங்கள் குற்றக் கண்டுபிடிப்புப் பணியிலும், குற்றத் தடுப்புப் பணியிலும் பொதுமக்களின் உடைமை களையும், உரிமைகளையும் பாது காக்கும் பணியிலும் உங்களுக்கே உரித்தான ஒரு புதிய உத்வேகத் துடன் செயல்பட வேண்டும் என்று இந்த நல்ல நேரத்தில் அன்போடு கேட்டுக் கொள் கிறேன்.

வாய்ப்பும், வசதியும் அற்ற ஏழை எளிய மக்களுக்கு அது கிராமங்கள் ஆனாலும் சரி, நகரங்கள் ஆனாலும் சரி தாங்கள் எதிர்கொள்ளுகின்ற பல்வேறு சட்டம் ஒழுங்கு, உரிமை மீறல்; உடைமைப் பறிப்பு போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, நம்பிக்கையுடன் அவர்கள் நாடுகின்ற ஒரே புகலிடம், காவல் நிலையம் தான். சட்டத்தின் கீழ், தங்களுக்குப் பாதுகாப்பும்; நிவாரணமும் வேண்டி, இந்தச் சமுதாயத்தின் அடிமட்டத்து மக்கள், ஏழை எளிய மக்கள், ஆதரவற்றோர், மகளிர், முதியோர் ஆகியோர் காவல்துறையை அனுதினமும் நாடுகிறார்கள். தங்களுடைய குறைகளை முறையிட்டுத் தீர்வு காண, காவலர்களை நாடி வருகின்ற, எண்ணற்ற ஏழை

மக்களிடம் உற்றதொரு நண்பராக, பாதுகாவலராகக் காவல்துறையினர் நடந்து கொள்ள வேண்டும். அதன் மூலம் தற்போது காவல்துறை ஆற்றி வரும் சேவை, மேலும் பன்மடங்கு சிறப்படையும் என்பது உறுதி.

காவல்துறையைப் போலவே, சிறைத் துறையினரும், தீ அணைப்புத் துறையினரும், பல்வேறு கடினமான சூழ்நிலைகளில் செயலாற்றி வருகின்றார்கள். இத்துறைகளைச் சேர்ந்தவர்கள், தங்கள் கடமைகளைச் சீரிய முறையில் செயலாற்றும் போது, இயல்பாகவே, பொதுமக்களின் மனமார்ந்த பாராட்டுதல்களையும், நல் வாழ்த்துக்களையும், எளிதில் பெற்றுவிடுவார்கள். இந்த உண்மையை மனதில் நிறுத்தி, இத்துறையைச் சேர்ந்தவர்கள் செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வண்ணமயமான இந்த விழாவினை எல்லாச் சிறப்புகளுடன் மிகவும் சீரிய முறையிலே அமைத்து இங்கே பெருந்திரளாகக் குழுமியுள்ள பொதுமக்கள், அனைவரின் உள்ளங்களையும் கொள்ளை கொள்ளும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்த காவல்துறை இயக்குநர், திரு வால்டர் தேவாரம் அவர்களுக்கும், அவர் உடனிருந்து பணியாற்றிய அனைத்து மாவட்டக் காவல்துறை அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும், என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்களையும் நெஞ்சார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கம் வழங்குகின்ற, இந்த விழா தமிழகக் காவல்துறையின் அனைத்துப் பிரிவினரும், ஒன்று சேர்ந்து எடுக்கிற ஒரு இனிய திருவிழாவாக உருவாக்கிக் காட்டியதற்காகக் காவல்துறை இயக்குநர் திரு வால்டர் தேவாரம் அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகெங்கும் பெண்களின் சம உரிமைத் தத்துவம் புதிய பரிமாணத்தைப் பெற்று வருகின்ற சூழ்நிலையில், தமிழகக் காவல் துறையின் மிக முக்கியமான அங்கமாக விளங்கும் பெண் காவலர்கள் பிரிவினைச் சேர்ந்த பெண் காவலர்களும், விளையாட்டுக்களிலும், கலை நிகழ்ச்சிகளிலும் பங்குகொண்டு "நாங்கள் எவருக்கும் சளைத்தவர்கள் அல்ல" என்பதை, இங்கே நிரூபித்துக் காட்ட உள்ளார்கள். வீர விளையாட்டுக்களிலும், மற்ற நிகழ்ச்சிகளிலும், பங்கு கொள்ள உள்ள அனைவருக்கும், மீண்டும் எனது உள்ளங்கனிந்த வாழ்த்துக்கள். வண்ணமிகு இந்த விழாவிற்குப் பெருந்திரளாக வந்து, சிறப்பு சேர்த்த, எனது அன்பிற்குரிய தமிழகத்துப் பெருமக்கள் அனைவரும், எல்லா நலனும் வளமும் பெற்று, வாழ்வாங்கு வாழ்க என்று நெஞ்சார வாழ்த்துகிறேன்.

# ஆதிதிராவிடர் மாணவர்க்கான விடுதிக் கட்டடங்கள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மாணவ/மாணவியர்களின் கல்வி வளர்ச்சிக்காக, தமிழக அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அவைகளில் மாணவ/மாணவியர்களின் கல்வி பாதிக்காதிருக்க புதிய விடுதிகள் திறத்தல் மற்றும் ஏற்கெனவே இருக்கிற விடுதிகளுக்குக் கட்டடங்கள் கட்டுதல் என்பதும் ஒன்றாகும். ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலைக்கேற்ப விடுதிகளுக்குக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

*1995- 96-* ஆம் ஆண்டில் ஆறு மாணவர் விடுதிகளுக்கும் பத்து மாணவியர் விடுதிகளுக்கும் எல்லா வசதிகளும் கொண்ட நிலையான கட்டடங்கள் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண். 160, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 12.9.95-இல் ஆணை வெளியிடப் பட்டுள்ளது.



# 'தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்கும் விழா!'

**கோ**வையில் ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில், "மாண்புமிகு தமிழக முதலமைச்சர் பதக்கம் வழங்கும் விழா" 8.10.95 அன்று மிகக் கோலாகலமாக நடந்தேறியது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், காவல், தீயணைப்பு மற்றும் ஊர்க்காவல் படையில் சிறந்த பணியாற்றி வந்த காவலர்களுக்குப் பதக்கங்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், காரின் முன்னும் பின்னும் குதிரைப்படை வீரர்கள் அணிவகுத்து அழைத்து வர, மங்கள வாத்தியங்களின் வானதிரும் முழக்கத்தோடு, அதற்கு ஈடுகொடுக்கும் வகையில், அரங்கில் அமர்ந்திருந்தோரின் ஆரவாரத்தோடும், நேரு விளையாட்டு அரங்கிற்கு வருகை தந்தார். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைத் தமிழ்நாடு காவல்துறைத் தலைவர் திரு டபிள்யூ ஐ. தேவாரம், இ.கா.ப., அவர்கள் வரவேற்றார்.

திடலில் அமைக்கப்பட்டிருந்த எழில்மிகு மேடைக்குச் சென்று, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், காவலர்கள் அளித்த வீர அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்கள். பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெண்ணிற ஜீப்பில் ஏறி, கூடியிருந்த மக்கள் அனைவருக்கும் தன் அன்பையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொண்டே வலம் வந்தார். மக்களும் வானதிர ஆரவாரம் செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். பின்னர், தமிழகக் காவல்துறை, சிறைத்துறை, தீயணைப்புத்துறை மற்றும்





ஊர்க்காவல் படை ஆகியவற்றைச் சேர்ந்தவர்களின் சீரிய சேவைக்காகவும், சிறப்புமிக்க செயல்களுக்காகவும் முதலமைச்சரின் பதக்கங்களை, 85 காவலர்களுக்கு வழங்கிப் பெருமைப்படுத்தினார்.

மேலும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், சந்தன மரக் கடத்தல் வீரப்பனிடம் சிக்கியிருந்த பிணையாளர்களை உயிருடன் பிடிக்க மிகச் சிறப்பான முறையில் நற்பணி ஆற்றியமைக்காக, கோவை மாவட்ட முன்னாள் ஆட்சித் தலைவர் திரு சி.வி. சங்கர், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் சந்தன மரக் கடத்தல் வீரப்பனிடம் சிக்கியிருந்த பிணையாளர்களை மீட்க, சிறப்பு அதிரடிப் படைக்குத் தளபதியாக நடத்திச் சென்ற போற்றத்தக்க நற்பணியைப் பாராட்டி, தமிழகக் காவல்துறைத் தலைவர் திரு வால்டர் தேவாரம், இ.கா.ப., அவர்கள் உள்ளிட்ட 13 காவல்துறை அலுவலர்களுக்குத் "தகுதி நற்சான்றிதழ்" வழங்கியும் பெருமைப்படுத்தினார். அத்துடன் கமாண்டோ பயிற்சி பெற்ற காவலர்களுக்கிடையே நடைபெற்ற போட்டியில் சிறப்பான முறையில் திறமையைக் காண்பித்த 3 காவலர்களுக்குப் பதக்கங்களும், காசோலைகளும் வழங்கப்பட்டன.

விருதுகள் வழங்கிய பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் விழாப் பேருரையாற்றினார். பிறகு பதக்கங்கள் பெற்ற காவலர்களோடு புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

அடுத்து, தமிழகக் காவல் துறையின் சார்பாக, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு காவல்துறைத் தலைவர் திரு வால்டர் தேவாரம், இ.கா.ப., அவர்கள் நினைவுப் பரிசு வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள், காவலர்கள் நிகழ்த்திய அற்புதமான கலை நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தார்.

திடலில் இருந்த காவலர் ஒருவர், கையில் தீப்பந்தத்துடன் ஓடி வந்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கரங்களில் தீப்பந்தத்தைக் கொடுக்க, வேறு ஒருவர் அதை வாங்கிச் சென்று திடலில் வைக்கப்பட்டிருந்த பீரங்கியின் வாயில் திணிக்க, அரங்கமே அதிர இடியோசையையும் தோற்கடிக்கும் சப்தத்தோடு பீரங்கி முழங்க, எதிரே கோட்டை வாசல் போன்று அலங்கரிக்கப்பட்டிருந்த கதவுகள் திறந்து அதிலிருந்து வெளிவந்த காவலர்கள் நிகழ்த்திய கலை நிகழ்ச்சிகள் கண்ணையும் கருத்தையும் பெரிதும் கவர்ந்தன.

'புரட்சித்தலைவியின் நெருப்புக் கணைகள்' என்றழைக்கப்படும் மகளிர் மற்றும் ஆடவர் காவலர்கள் நடத்திக்காட்டிய மோட்டார் சைக்கிள் வீர தீரச் செயல்களும், கையில் தீப்பந்தத்தை

# தேனுபுரீஸ்வரர் திருக்கோயில் பராமரிப்புக்கு

## —மாண்புமிகு முதல்வர் உதவி



செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் மாடம்பாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு தேனுபுரீஸ்வரர் திருக்கோயிலைச் சரிபார்க்கும் பணிகளும் புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்வதற்காக நிதி தேவைப்படுகின்றது என்றும், அதனை முதலமைச்சரின் திருக்கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து வழங்க வேண்டும் என்று கோரியும் இந்து சமய அறநிலையத் துறை ஆணையர், மாண்புமிகு தமிழக முதலமைச்சரும் தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரியத் தலைவருமான டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை ஒன்றினை அனுப்பி இருந்தார்.

மிகவும் பழமையானதும், சோழர் காலத்தில் கட்டப்பட்டு பின்னர் விஜயநகர மன்னர்களால் பராமரிக்கப்பட்டு, அருணகிரிநாதர் போன்ற சமயப் பெரியோர்களால் பாடப்பெற்ற திருக்கோயில்களில் இதுவும் ஒன்று.

அருள்மிகு தேனுபுரீஸ்வரர் திருக்கோயிலின் சிறப்பினையும், அதனுடைய எழில்மிகுந்த சிற்ப வேலைப்பாடுகளைப் பராமரிக்கப்பட வேண்டிய அவசியத்தைக் கருதியும், அத்திருக்கோயிலின் புனரமைப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சர் திருக்கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ஒன்பது லட்சம் ரூபாய் நிதி வழங்கி ஆணை பிறப்பித்துள்ளார். இதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்பட்டு அத்திருக்கோயில் திருப்பணி விரைந்து நடைபெற வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார்.

---

வைத்துக்கொண்டு Thanks to CM என்றும், welcome to CM என்றும் எழுத்து வடிவம் காண்பித்த அந்தத் திறமையும் மிகவும் பாராட்டுக்குரிய ஒன்றாகவே இருந்தது. முன்னதாக, காவல்துறைத் தலைவர் திரு வால்டர் தேவாரம், இ.கா.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார். உள்துறைச் செயலர் திரு வரதராஜுலு, இ.ஆ.ப., அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். அனைத்து அமைச்சர் பெருமக்களும் வாரியத்தலைவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.

இந்த மாபெரும் விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் காவல் அலுவலர்களுக்கு அளித்த விருதுகள், காவல் துறைக்கு ஒரு புதிய உத்வேகத்தையும், தங்கள் பணியில் மேலும் ஆழ்ந்து ஈடுபடுத்திக் கொள்ளும் சீரிய நோக்கத்தையும் ஏற்படுத்தும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

—நிகழ்ச்சித் தொகுப்பு

க. சண்முகசுந்தரம்.

# மீனவர் சேமிப்புத் திட்டத்துக்கு

# ரூ 11½ கோடி!

## —மாண்புமிகு முதல்வர் ஆணை



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் ஆலோசனை மற்றும் அறிவுரையின் அடிப் படையில், தமிழக அரசு தமிழ் நாட்டிலுள்ள மீனவச் சமுதாயத்தினரின் நல்வாழ்வுக்காகப் பல்வேறு நலத்திட்டங்களைக் கடந்த நான்கு ஆண்டுகளாகச் செயல்படுத்தி வருகின்றது.

தமிழக அரசு இதுவரை நடைமுறைப் படுத்தியுள்ள திட்டங்களில் மீனவச் சமுதாயத் தினரை மிகவும் கவர்ந்துள்ள திட்டம் 'மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்' ஆகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் அறிவுரையின் படி, நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கும் மீனவர்களின் நலம் காக்கும் 'மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்' கீழ் மீன்பிடிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் தங்கள் சேமிப்புத் தொகையாக மாதம் ரூ.45 வீதம் எட்டு மாதங்களுக்கு ரூ.360 செலுத்துவார்கள். இவ்வாறு மீனவர்களால் சேர்க்கப்பட்ட தொகைக்கு ஈடாக மத்திய மற்றும் மாநில அரசு தங்கள் பங்கான ரூ. 720-ஐ செலுத்துவார்கள். இந்தத் தொகை யானது மீன் பிடிப்பு இல்லாத பருவ காலங்களில் மாதம் ரூ.270 வீதம், நான்கு மாதங்களுக்கு மொத்தம் ரூ1080 ஆக, இத்திட்டத்தில் சேர்ந்த மீனவர்களுக்கு வழங்கப்படும். இந்த அரசு பதவியேற்ற 1991-92-ஆம் ஆண்டில் மீனவர்கள் இத் திட்டத்தின் கீழ் ரூ.10 மட்டும் மாதம்தோறும் செலுத்த வேண்டியிருந்தது. மீன் பிடிப்பு, பருவ காலங்கள் அற்ற நாட்களில் அந்தத் தொழில் ஒன்றினையே நம்பியிருக்கும் பல்லாயிரக் கணக்கான மீனவச் சமுதாயத்தினர் பயனடையும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மீனவர்கள் மாதம்தோறும் கட்டவேண்டிய தொகையாக ரூ.10 ஐ, ரூ.45 ஆக உயர்த்தியதை அடுத்து, மாதம் ரூ.750 ஐ நான்கு மாதங்களுக்குப் பெற வழி வகுத்தார். 1991-92-இல் 76,610 மீனவர்கள் மட்டும் இத்திட்டத்தில் சேர்ந்திருந் தனர். ஆனால், தற்போது 1,59,010 மீனவர்கள் இத்திட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

மீனவர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்று விளங்குகின்ற இந்த "மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்" கீழ் நடப்பு ஆண்டான 1995-96-ஆம் ஆண்டில் 11.45 கோடி ரூபாயைச் சேமிப்பு மற்றும் நிவாரணத் தொகையாக வழங்கிட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உத்தர விட்டுள்ளார்கள். இத்திட்டத்தின் கீழ், 1991-92-ஆம் ஆண்டில் 65.8 இலட்சம் ரூபாயும், 1992-93-ஆம் ஆண்டில் 5.36 கோடி ரூபாயும், 1993-94-ஆம் ஆண்டில் 7.20 கோடி ரூபாயும், 1994-95-ஆம் ஆண்டில் 9.49 கோடி ரூபாயும் 'சேமிப்பு மற்றும் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது.



# அரசுப் போக்குவரத்துக்கழகத் தொழிலாளர்களுக்குப் போனஸ்!

—மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு 1994-95-ஆம் ஆண்டுக்கான போனஸ் தொகையாக சென்ற ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் போனஸ் சட்டப்படி குறைந்தப் பட்ச போனசாக 8.33 சதவீதம் வழங்கப் படும். அதோடு தொழிலாளர் ஒவ்வொரு வருக்கும் கருணைத் தொகையாக 8.67 சதவீதமும் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பின்படி, போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்குச் சென்ற ஆண்டைவிட 0.75 சதவீதம் கூடுதலாக போனஸ் கிடைக்க வகை செய்யப் பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் இந்த அறிவிப்பின் மூலம், தமிழக அரசு போக்கு வரத்துக் கழகத்தொழிலாளர்கள் 1,16,000 பேர் பயன் பெறுவார்கள். போனஸ் தொகையும், கருணைத் தொகையும் சேர்த்து, போக்குவரத்துக் கழக ஊழியர் களுக்கு மொத்தம் 58.57 கோடி ரூபாய் வழங்கப்படும்.

போனஸ் சட்டத்தின்படி, போனஸ் பெற வாய்ப்பில்லாத சுமார் 2,000 பேர்களுக்குத் தலா 2,500 ரூபாய் கருணைத் தொகையாக வழங்கப்படும். போனஸ் பெறுவதற்கான கால அளவு தகுதி ஒரு ஆண்டுக்குக் குறைவாக இருப்பினும், கருணைத் தொகை முழுமையாக வழங்கப் படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் சென்ற ஆண்டுக்கு (1993-94) உரிய போனஸ் நிலுவைத் தொகையையும், அந்த ஆண்டுக் குரிய கருண்ணத் தொகையையும், இந்த ஆண்டு வழங்க ஆணை பிறப்பித்துள்ளார். நிலுவைத் தொகையாக மொத்தம் 18.76 கோடி ரூபாய் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும். இந்த நிலுவைத் தொகை மட்டும் தமிழர் திருநாளாம் பொங்கல் தினத்தை ஒட்டி வழங்கப்படும்.

எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு, தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டி லுள்ள 19 அரசுப்போக்குவரத்துக் கழக ஊழியர்கள் 1,16,000 பேர் பயன்பெறும் வகையில் மேற்கண்ட ஆணைகளை வெளி யிட்டுள்ளார்.

---

✯ உங்களைவிட உங்களுக்கு யாருமே நல்ல அறிவுரையை வழங்க முடியாது.

—சிஸேரோ

✯ பிறரைச் சீர்திருத்தும் கடமையை விடத் தன்னைச் சீர்திருத்துவதே முதல் கடமை.

—பெர்னாட்ஷா

✯ நன்மைக்கு நன்மை செய். தீமைக்கும் நன்மை செய்.

—இங்கர்சால்



# அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா

தமிழக அரசின் சார்பாக, அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா 13.10.95 அன்று, கலைவாணர் அரங்கில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு இ. மதுசூதனன் அவர்கள் அண்ணல் காந்தியடிகளின் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்தார். மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தலைமையேற்றார். மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திரு பி. ஈஸ்வரமூர்த்தி அவர்களும், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர் திரு சி. தாமோதரன் அவர்களும் மாணவ, மாணவியருக்குப் பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார்கள்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. தி.சண்முக ராஜேஸ்வரன் இ.ஆ.ப அவர்கள் விழாத் தொடக்கவுரையாற்றிப் பேசும் போது குறிப்பிட்டதாவது:

"டாக்டர் புரட்சித் தலைவியின் ஆணைக்கிணங்க, பாட்டுக்கொரு புலவன் பாரதிக்கும், நாட்டை ஆள்பவருக்குக் கடமை கண்ணியம், கட்டுபாடு வேண்டுமென உரைத்த பேரறிஞர் அண்ணாவுக்கும் ஈட்டியதெல்லாம் ஏழைகளுக்கே என்று வாழ்ந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்க்கும், கருமவீரர் காமராஜருக்கும் இன்னும் இது போன்று நாட்டுக்குழைத்த நல்லவர்களுக்கெல்லாம் விழா எடுத்து வருகின்றது தமிழக அரசு. அதேபோல் அண்ணல் காந்தியடிகளுக்கு இந்த நாளை நினைவுக்கூர்ந்து வருங்காலத் தலைமுறை வளர்ந்து நலம் பெறவும், அவரது பிறந்த நாளில் நமது நன்றியையும், அவர்பால் நாம் கொண்டுள்ள பற்றையும் எடுத்துக் காட்டிடவும் அரசு விழா எடுத்துச் சிறப்பித்து வருகின்றது.

"இன்றைய மாணவர்கள் நாளைய சமுதாயத்தின் முதுகெலும்புகள். காந்தியடிகள் போதித்த நெறியைப் பின்பற்றி நடந்தாலே போதும், அவர்களது வாழ்க்கைப் பிரகாசிக்கும்.

"காந்தியடிகள் ஆற்றிய தொண்டு, மகத்தான தொண்டு. வாழ்ந்த வாழ்க்கை மகத்தான வாழ்க்கை. ஒரு நாள் காந்தியடிகளுக்கு ஒருவர் பணத்தைக் கொடுத்தார். 'போதாது' 'போதாது' என்று கூறி காந்தியடிகள் இன்னும் வாங்கிக் கொண்டே இருந்தார்.

# அண்ணலைப் பற்றி அண்ணா

அண்ணல் காந்தியடிகள் எல்லாத் துறைகளிலும் தமது முத்திரை பொறித்துச் சென்றவர்;

அவர் ஒரு நாட்டின் காலம்! ஒரே ஒரு துறைக்கு அல்ல, எல்லாத் துறைகளுக்கும் ஒரு திருப்பத்தை, ஒரு புதிய பொலிவை, வலிவைக் கொடுத்தவர்.

ஒரு நாட்டின் முன்னேற்றம் ஏதோ ஒரு துறையிலே மட்டும் பெறப்படுகிற வெற்றியைப் பொறுத்தது அன்று. எல்லாத் துறைகளிலும் வெற்றி காணவேண்டும். அவைகளின் ஒட்டு மொத்தத்தைக் கொண்டே அந்நாடு முன்னேற்றம் அடைந்திருக்கிறதா என்று கணக்குப் பார்க்க வேண்டும்.

ஒரு நாட்டின் வரலாற்றிலே அவ்விதமான ஒரு கணக்கு அடிக்கடி கிடையாது. ஒரு நூற்றாண்டுக்கு ஒரு முறை கிடைக்கும் என்றும் கூறிவிட முடியாது. அந்தக் கணக்கு இந்நாட்டுக்குக் காந்தியடிகள் வடிவத்திலே கிடைத்தது. எனவேதான், காந்தியடிகளின் பிறந்தநாள் ஒரு மாபெரும் தலைவரின் பிறந்த நாளாக மட்டுமின்றி, ஒரு நாட்டுக்குக் கிடைத்த பொற்காலம் என்ற முறையிலே சிறப்புப் பெறுகிறது.

–பேரறிஞர் அண்ணா

மறுபடியும் மறுபடியும், வாங்கிக் கொண்டே இருந்தார். இதைக் கண்டதும் காந்தியடிகளிடம், "நீங்கள் போதும் என்றே சொல்லமாட்டீர்களா?" என்று கேட்டார். அதற்குக் காந்தியடிகள் சொன்னது; "கொடுங்கள், நான் வேறல்ல, இந்த தேசம் வேறல்ல; நான் வேறல்ல இந்தத் தேசத்து மக்கள் வேறல்ல: இந்தத் தேசத்து மக்களுக்கு அதிகப் பசி உள்ளது. அவர்களுக்கு இந்தப் பணம் பயன்பட வேண்டும்" என்று கூறினார்.

"இன்னும் ஒரு சம்பவம். ஒரு நாள் காந்தியடிகள் சிறையில் வாழ்ந்த போது, சிறை அதிகாரிகள் விளக்கெண்ணெய் வைத்து அடுப்பெரித்து, சுடுநீர் வைத்துக் கொண்டிருந்தார்கள். சுடுநீரை அந்த அடுப்பிலிருந்து இறக்கிவிட்டபோதும், அந்த அடுப்பை அணைக்கவில்லை. அப்போது காந்தியடிகள் அந்த அடுப்பில் உள்ள தீயை அணைக்கச் சொன்னதற்கு, அது வீணானால் பரவாயில்லை. அது அரசுப் பணந்தானே" என பதில் கூறினார்கள். அதற்குக் காந்தியடிகள் கூறியது "நாம் வேறல்ல, அரசு வேறல்ல, நம் பணம் வேறல்ல, நம் அரசுப் பணம் வேறல்ல'' என்று சொன்னார்.

"அண்ணல் காந்தியடிகள் சொன்ன கருத்துக்களை, அவர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை நெறி முறையை அவரது நற்பண்புகளை நாம் அனைவரும் பின்பற்றி வாழுதல் வேண்டும்".

பேராசிரியை திருமதி சாரதா நம்பி ஆரூரன் அவர்கள் பேசும்போது கூறியதாவது:

"காந்தியடிகள் எதைச் சொன்னாரோ, அதைச் செய்தார். எப்படி வாழ வேண்டும் என்று சொன்னாரோ, அப்படியே வாழ்ந்தும் காட்டினார். முதலில் தியாகம் செய்ய வேண்டும். தியாகம் செய்யும் நல்ல உள்ளங்களால் தான் நன்மை செய்ய இயலும்; மனமும் இருக்கும். அரசியல் பற்றி மாணவர்களிடம் அறிவுரை சொல்ல வேண்டுமானால், "அரசியலைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள். ஆனால், அரசியலில் சேராதீர்கள்" என்று கூறலாம். அறிஞர் அண்ணா கூட இதைப்பற்றிக் கூறியபோது. "அரசியல் என்பது அத்தை மகள் போல, பாசத்துடன் பழகு; தொட்டுப் பார்க்க எண்ணாதே' என அவர் பாணியிலே கூறினார். பெண்களுக்கு முழு சுதந்திரம் வேண்டும் எனக் கூறியவர் அண்ணல் காந்தியடிகள். அவர் விழாவினை இங்கு அரசு நடத்திக் கொண்டிருப்பது மிகப் பொருத்தமாகும்".

பள்ளிக் கல்வி இணை இயக்குநர் திரு மூ.ராஜாராம் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:

"காந்தியடிகள் திருக்குறளைப் படித்துவிட்டு, நான் தமிழ் முழுவதும் கற்க விரும்புகிறேன் என்று கூறினார். அத்தகைய காந்தியடிகளுக்கு அரசு, இன்று பிறந்த நாள் விழா எடுத்துப் பெருமை சேர்க்கின்றது. காந்தி அடிகளைப் பற்றி ஆங்கிலேயர், Prince of Peace என்று வர்ணித்

திருக்கிறார்கள். புத்தர், ஏசுவுக்கு நிகராக வாழ்க்கையை வாழ்ந் திருப்பவர் காந்தியடிகள். அவரின் அகிம்சை வழியைக் கடைப்பிடித்து வாழ்வதே நமது இலட்சியமாக இருக்க வேண்டும்".

சேப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜீனத் சர்புதீன் அவர்கள் பேசுகையில், "வெள்ளையனே வெளியேறு இயக்கம் நடத்தி வெற்றி கண்ட அண்ணல் காந்தியடிகளுக்கு வெள்ளை மனம் படைத்த புரட்சித்தலைவி அவர்கள் விழா எடுத்து வருவது மிகவும், பொருத்தமானது" என்று கூறினார்.

மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் திரு. சி. தாமோதரன் அவர்கள் தனது சிறப்புரையில் குறிப்பிட்டதாவது:

"இதய தெய்வம் புரட்சித் தலைவியின் அரசு எதை எதை எப்போது செய்ய வேண்டுமோ, அதை அதை அப்போது செய்து வருகிறது. மார்பில் தன்னைச் சுட்டவனை மன்னித்து விடுங்கள் என்று கூறிய ஒரு மகா ஆத்மாவுக்கு இன்று அரசு விழா எடுத்து வருவது பெருமைக்குரியது. மகாத்மா தன் தவறுகளையெல்லாம் தன் சுயசரிதைகளில் சுட்டிக்காட்டியவர்.

"தமிழ்நாட்டை நேசித்தவர், தமிழை நேசித்தவர். இந்தியர்கள் எப்போது முழு ஆடை புனைந்து கொள்ளும் வேளை ஏற்படுகிறதோ அப்போதுதான் தான் முழு ஆடை அணிவேன் என்று மேலாடை அணியாமலே தம் வாழ்நாளைக் கழித்தவர். பெண்ணுரிமைக்குக் குரல் கொடுத்தவர். இந்திய தேச விடுதலைக்கு வித்திட்டவர். அந்த மகாத்மாவை உலகமே போற்றுகிறது.

"அண்ணல் காந்தியடிகளின் கனவுகளை நிறைவேற்றி, 1 முதல் 5-ஆம் வகுப்பு வரை, மகளிர் ஆசிரியைகளே நியமனம் செய்து, 10-ஆம் வகுப்பிலும், 11-ஆம் வகுப்பிலும் தமிழ்ப் பாடத்தில் முதல் இடத்தைப் பெறும் மாணவ, மாணவியருக்குத் தங்கப் பதக்கம் வழங்கும் திட்டத்தையும் தீட்டி, பல சாதனைப் படைத்து வரும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், இன்று விழா நடத்தி வருவது மிக மிகப் பொருத்தமான ஒன்று".

"மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திரு. பி. ஈஸ்வர மூர்த்தி அவர்கள் தமது சிறப்புரையில் கூறியதாவது:

"அகிம்சை என்ற சொல்லை உலகிற்கு அறிமுகப்படுத்திய ஒப்பற்றத் தலைவர் அண்ணல் காந்தியடிகள்.

"கிராமம் வாழ வேண்டுமானால், கிராம மக்கள் நன்றாக வாழ வேண்டும். கிராம மக்கள் நன்றாக வாழ்ந்தால் தான், நாடு முன்னேற முடியும் என்பதில் காந்தியடிகள் பெரும் நம்பிக்கைக் கொண்டிருந்தார். நமது இதய தெய்வம் அவர்கள் கிராமத்திற்கும், கிராம மக்களுக்கும், ஏழை, எளியோர்க்கும் பல திட்டங்களைத் தீட்டி இந்தியத் துணைக் கண்டத்திலே மிகச் சிறப்பான முறையில், நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அண்ணல் காந்தியடிகள் அவர்களுக்கு, எங்கள் இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள், விழா எடுத்துப் பெருமைப்படுத்தி வருவது மிகவும் பொருத்தமானதாகும்.







மாண்புமிகு செய்தி-விளம்பரத் துறை அமைச்சர், திரு. மு.தென்னவன் அவர்கள் தமது தலைமையுரையில் கூறியதாவது:

“கடலுக்கு நதிகள் எடுக்கும் விழா, தென்றலுக்குச் செந்தூரப் பூக்கள் எடுக்கும் விழா. நீர் தரும் மேகங்களுக்குப் பயிர்கள் எடுக்கும் விழா, அது போலத் தான் அண்ணல் காந்தியடிகளுக்கு நமது அன்னை புரட்சித் தலைவி எடுக்கும் விழா.

“புருஷர்க்கு மகா புருஷர் என்றும்,
நதிக்கு மகா நதி என்றும்
கூறுவது போல,

ஆத்மாவுக்கு மகா ஆத்மா என்ற பெயரைப் பெற்று உலக அரங்கில் உலவி வந்தவர் உத்தமர், அண்ணல் காந்தி அடிகள்.

“வாழ்ந்த காலத்திலேயே, மகா ஆத்மா என்று வாழ்ந்து மங்காப்புகழ் படைத்தவர் மகாத்மா காந்தி அவர்கள். இப்பேர்ப்பட்ட வீரர்களுக்கும், தியாகிகளுக்கும் விழா எடுத்துப் பெருமைச் சேர்ப்பதே எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவியின் கடமை என்றா கிறது.

“நாடெல்லாம் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கச் செய்ய, தனது மூச்சுக் காற்றை நிறுத்தித் தியாகங்கள் செய்து நாட்டைக் காப்பாற்றியவர் அண்ணல் காந்தியடிகள். அத்தகைய தியாகிகளின் நினைவைப் போற்றும் வகையில்தான் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி, அவர்கள் தியாகிகளுக்கு ஒரு நினைவுத் தூண் எழுப்பித் பெருமைச் சேர்த்தார். மகாத்மா போதித்த மதுவிலக்கை ஆதரித்து, மதுவை விலக்கி, மதுவிலக்கில் ஒரு மகாத்மா வாகத் திகழ்கிறார் இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள்.

**● தூய்மையான இருதயம் இல்லாத எந்த ஆணும் பெண்ணும் இறைவன் சந்நிதியை நெருங்கவே முடியாது.**

**● மாணவனுக்கு மிகச் சிறந்த பாடப் புத்தகம், அவனுடைய ஆசானே!**

**—அண்ணல் காந்தியடிகள்**

“அண்ணல் காந்தியடிகளின் கனவை நனைவாக்கும் விதத்திலும், பிற்பட்டோரின் வாழ்க்கையை முன்னேற்ற வேண்டும் என்ற நோக்கிலும் புரட்சித்தலைவி, ஆதிதிராவிட மக்களுக்கென 10 அம்சத் திட்டம் ஒன்றைத் தயாரித்து, செயல் படுத்தி வருகிறார். டாக்டர் புரட்சித்தலைவியின் ஆட்சியில் தான், அண்ணல் காந்தியடிகளின் கனவுகள் நனவாயிருக்கின்றன என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை. டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தான் அண்ணல் காந்தியடிகளுக்கு விழா எடுத்து நடத்துவதற்கு மிகப் பொருத்தமானவர் என்று என்னால் திட்டவட்டமாகச் சொல்ல முடியும்”.

விழாப் பேருரையாற்றிய மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு இ. மதுசூதனன் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:

“தங்கள் இன்னுயிரைத் தந்து, பாரத நாட்டைச் சுதந்திரம் பெற வைத்தவர் நம் அண்ணல் காந்தியடிகள். முதலில் காங்கிரஸ் இயக்கத்தை அன்னிபெசன்ட் அம்மையார் அமைத்தார். அவரைத் தொடர்ந்து கோகலே, திலகர். மோதிலால் நேரு, ஜவகர்லால் நேரு போன்றோரால் தலைமை தாங்கப் பட்டது. 1916 -ல்தான் இந்தியத் தேசியக் காங்கிரஸ் தொடங்கப் பட்டது. கல்லாமை, இல்லாமை, இயலாமை, தீண்டாமை என்ற கொடுமைகளை இல்லாமல் செய்ய வேண்டும் என்பதற்கு அரும்பாடுபட்டவர் அண்ணல் காந்தியடிகள்.

“கிராம முன்னேற்றமே நாட்டு முன்னேற்றம்' என்று முழங்கியவர் நமது மகாத்மா. கிராமங்களை நகரங்களாக மாற்ற வேண்டும் என்று கோடு போட்டவர் நமது மனிதப் புனிதர் புரட்சித்தலைவர் அவர்கள். அதற்கு ரோடு போட்டவர் நமது இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள். கிராமப் பள்ளிகளில் கம்ப்யூட்டர் கல்வி கொண்டுவர வேண்டும் என்றவர் நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். நடு இரவில் ஒரு இளம் பெண் உடலில் தங்க நகைகளை அணிந்து, கொண்டு பயமில்லாமல் எப்போது நடமாட முடிகிறதோ, அன்று தான் நாட்டிற்கு முழுச் சுதந்திரம் கிடைத்தது போலாகும் என்றார் அண்ணல் காந்தி அடிகள். பெண்ணுரிமை



## சிலம்புச் செல்வர்

# ம.பொ.சி.யின் மருத்துவச் செலவு:

## தமிழக அரசு ஏற்கும்

அண்மையில் மறைந்த சிலம்புச் செல்வர் திரு ம.பொ.சி. அவர்களின் மருத்துவச் செலவைத் தமிழக அரசே ஏற்றுக் கொள்ளும் என, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார்.

மறைந்த சிலம்புச் செல்வர் திரு ம.பொ.சிவஞானம் அவர்கள் சென்னையில் ஒரு தனியார் மருத்துவமனையில் இதய நோய், மூளையில் இரத்தக் கசிவு மற்றும் கீழே விழுந்ததால் இடுப்பில் ஏற்பட்ட முறிவு ஆகியவற்றிற்காகக் கடந்த 11.8.1995 அன்று அனுமதிக்கப்பட்டார். 3.10.1995 வரை அந்த மருத்துவமனையின் தீவிரக் கண்காணிப்புப் பிரிவில் அவருக்குச் சிறந்த மருத்துவ நிபுணர்களைக் கொண்டு தீவிர மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, அவர் மறைந்த நாள் வரை அவருக்கு அளிக்கப்பட்ட மருத்துவச் செலவான 1,28,000 ரூபாயை அவர் தமிழுக்கும், தமிழ்நாட்டிற்கும் ஆற்றிய சேவையைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசே அந்த மருத்துவச் செலவை ஏற்றுக் கொண்டு, மருத்துவமனைக்கு அந்தச் செலவை நேரடியாகச் செலுத்தும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார்.

திரு ம.பொ.சி. அவர்களின் குடும்பத்தினருக்கு இந்த மருத்துவச் செலவு ஒரு சுமையாக இருந்து விடக் கூடாது என்ற எண்ணத்திலும், தமிழ் மொழிக்கும், தமிழ்நாட்டிற்கும் அவர் ஆற்றிய அருந்தொண்டினை மதிக்கும் வண்ணமும், திரு ம.பொ.சி அவர்களது மருத்துவச் செலவைத் தமிழக அரசு ஏற்றுக் கொள்ளும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார்.

கிடைக்க வேண்டும் என்பதற்குப் பெரும்பாடு பட்டவர் அண்ணல் காந்தியடிகள். பெண் கல்விக்கு மாபெரும் நல்ல திட்டங்களைத் தீட்டி வரும் இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் இந்த விழாவினை எடுத்து நடத்தி வருவது மிகவும் பொருத்தமான ஒன்றாகும் என்பது உண்மை".

முன்னதாக, செய்தி -மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திரு. ஆர்.பரதன் அவர்கள் விழாவுக்கு வருகை தந்தோரை வரவேற்று உரையாற்றினார். விழா முடிவில், செய்தி -மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர். திரு. இரா. பா.கார்மேகம் அவர்கள் நன்றி நவின்றார். விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. தி.சண்முக ராஜேஸ்வரன் இ.ஆ.ப. அவர்கள் நினைவுப் பரிசுகளை வழங்கிச் சிறப்பித்தார்.

இவ்விழாவில், பல பள்ளிகளைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகள், கண்ணைக் கவரும் விதத்தில் அமைந்திருந்தது.

—விழாத்தொகுப்பு:
**க.சண்முகசுந்தரம்.**

தமிழ்நாட்டில் முதன் முறையாக ரூ.1 கோடி செலவில்

# மதுரையில் உடல் ஊனமுற்றோருக்கான பள்ளி

மதுரையில் உடல் ஊன முற்றோர் மறுவாழ்வுத்துறையின் மூலம் உடல் ஊனமுற்றோர், கண்பார்வையிழந்தோர், காது கேளாதோர் மற்றும் மன வளர்ச்சி குன்றியவர்கள் பலன் பெறும் வகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் நல்லாட்சியில் நாளும் ஒரு திட்டம் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டங்களைச் செயல் படுத்தி வெற்றி காண்பதில், மதுரை மாவட்ட மறுவாழ்வு அலுவலகம் முனைப்புடன் செயல்பட்டு முன்னோடியாய் உள்ளது. இந்த ஆண்டு மதுரை மாவட்டத்தில் 14,141 உடல் ஊனமுற்ற நபர்களுக்கு அடையாள அட்டைகளும், 40 சதவிகிதம் உடல் ஊனமுற்றவர் களுக்கு வயது வித்தியாசமின்றி அனைவருக்கும் இலவசப் பேருந்துப் பயணச் சலுகையும் வழங்கப்பட வேண்டுமென்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவின்பேரில் 78 நபர்களுக்கு இச்சலுகை வழங்கப்பட்டுள்ளது.

ஆரம்பக் கல்வி முதல் உயர்கல்வி வரை பயிலும் உடல் ஊனமுற்ற 1,416 மாணவ, மாணவியர்க்கு ரூ.70,000 நிதியுதவி, சுயவேலைவாய்ப்புத் திட்டத்தில் பல்வேறு சிறு தொழில்கள் தொடங்க 50 நபர்களுக்கு ரூ.50,000 அரசு மானியத்துடன் கடனுதவி, எந்த வேலையும் செய்ய இயலாத கடும் உடல் ஊனமுற்றவர் களைக் காப்பாற்றிடும் வகையில் மாதம் ரூ.100 வீதம் 50 நபர்களுக்கு உதவித்தொகை, தண்டுவடம் பாதிக்கப்பட்ட வேலை செய்ய இயலாத குடும்பத்தலைவி 13 நபர்களுக்கு, ரூ.3,000 வீதம் 39,000 நிதியுதவி, உதடு பிளவுபட்டு அழகு சீர்குலைந்தவர்களின் அவலங் களைத் துடைத்திடும் வகையில், இந்த ஆண்டு மாநில அளவில் 35 நபர்களுக்கு ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சை (Plastic Surgery) ரூ.3,000 செலவில் செய்திட உத்தரவிடப் பட்டுள்ளதைத் தொடர்ந்து, மதுரை மாவட்டத்திலிருந்து 28 நபர்கள் அறுவைச் சிகிச்சைக்காகப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இரு சக்கரவாகனங்கள் பயன் படுத்தும் 10 நபர்களுக்கு எரிபொருள் சலுகையும் வழங்கப்படுகிறது.

இளம்பிள்ளைவாதத்தை முற்றிலுமாக ஒழிக்கவும் இதனால் பாதிக்கப்பட்டவர் களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் 317 காலிப்பர் பூட்ஸ் இலவசமாக வழங்கப் பட்டுள்ளது. மேலும், ரூ.3 இலட்சம் செலவில் 100 நபர்களுக்கு மூன்றுச் சக்கரச் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

மதுரை மாவட்டத்தில் அரசு நிதியுதவியுடன் உடல் ஊன முற்றோருக்காக 2 பள்ளிகள், கண்பார்வையற்றோருக்கு 2 பள்ளிகள், காது கேளாதோருக்கு 2 பள்ளிகள்; மன வளர்ச்சி குன்றியோருக்கு 3 பள்ளிகளும் இயங்கி வருகின்றன. இப்பள்ளி களில் மாணவ, மாணவிகள் பயின்று பலன் பெற்று வருகின்றனர்.

உடலால் மட்டுமே ஊனம் - உள்ளத்தால் அல்ல. அவர்களும் பள்ளிசென்றுபடித்து முன்னேறி அரசுப் பணியில் மட்டுமல்லாது, விளையாட்டு போன்ற அனைத்துத் துறை யிலும் சாதனைகள் புரிய வேண்டுமென்ற வளரும் இளம்

கள்ளச் சாராயம் :

# மரணமடைந்த குடும்பத்திற்குத் தலா ரூ.10,000 உதவி!

## மாண்புமிகு முதல்வர் ஆணை

**கா**மராஜர் மாவட்டம் சாத்தூரில் கள்ளச் சாராயம் அருந்தியதால் பாதிக்கப் பட்டு சாத்தூர் அரசுப் பொது மருத்துவ மனையிலும், மதுரை ராஜாஜி பொது மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டு, அதில் 22 பேர் மரணம் அடைந்ததை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், இந்தத் துயர நிகழ்ச்சிக் குறித்து தனது ஆழந்த கவலையை யும், வருத்தத்தையும் தெரிவித்துள்ளார்.

இந்த விரும்பத்தகாத சம்பவத்தில் மரணமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு தனது இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு வணிகவரித்தறை அமைச்சர் திரு வி. சத்தியமூர்த்தி, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு அ.மா. பரமசிவன் ஆகியோரை அனுப்பி வைத்துள்ளார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சிலர் கள்ளச் சாராயம் அருந்துகின்ற கொடிய பழக்கத்தைக் கைவிட வேண்டும் என்றும், இதுபோன்ற துயரச் சம்பவங்களை நிச்சயமாகத் தவிர்க்க வேண்டும் என்றும் கருத்து தெரிவித்துள்ளார். மேலும், இந்தத் தகாத சம்பவத்திற்குக் காரணமானவர்களை உடனடியாகக் கண்டுபிடித்து, அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும்படி காவல்துறைக்கு ஆணை பிறப்பித்துள்ளார்.

கள்ளச் சாராயம் அருந்தி மரணம் அடைந்ததற்காக அரசு தரப்பிலிருந்து உதவித்தொகை வழங்குவது கொள்கை ரீதியாக அரசுக்கு ஏற்புடையதாக இல்லாவிட்டாலும், அந்தக் குடும்பங்கள் வறுமையில் வாடாமல் இருக்கவேண்டும் என்கின்ற ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையில், இதை ஒரு தவறான முன்னோடியாக எடுத்துக் கொள்ளாமல், இதை ஒரு சிறப்பு இனமாகக் கருதி, இந்தச் சம்பவத்தில் மரணம் அடைந்த குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் 10,000 ரூபாய் நிதி உதவித் தொகையை மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கி ஆணை பிறப்பித்துள்ளார்.

உடல் ஊனமுற்றோரை ஊக்குவிக்க வேண்டும் என்ற உயர்ந்த தொலைநோக்கு எண்ணம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆணைப்படி, தமிழகத்திலேயே, முதல் முறையாக உடல் ஊனமுற்றோருக்கென ரூ.1 கோடி செலவில் புதிய பள்ளிக் கட்டடம் கட்டி முடிக்கப் பட்டுள்ளது.

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி புலவர் இந்திரகுமாரி அவர்கள் தலைமையில், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்களால் திறந்து வைக்கப் பட்டு, சீரோடும் சிறப்போடும் செயல்பட்டு வருகிறதுஇப்பள்ளி

தற்போது 8-ஆம் வகுப்பு வரை உள்ள இப்பள்ளியை இனி வரும் காலங்களில் மேல்நிலைப் பள்ளி மற்றும் தொழில்நுட்பப் படிப்பு போன்ற வகுப்புகள் தொடங்கிட ஏற்பாடு மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், இக்கட்டட வளாகத்தில் உடல் ஊனமுற்றோருக்கான அங்க அவயங்கள் உற்பத்தி செய்யும் நிலையமும் செயல் பட்டு வருகின்றது.

உடல் ஊனமுற்றோர், பார்வையற்றோர், காது கேளாதோர், மனவளர்ச்சி குன்றியோர் ஆகிய அனைவரும் ஒரே இடத்தில் ஆலோசனை, தொழிற்பயிற்சி, வேலைவாய்ப்பு, உற்பத்தி, விற்பனை மற்றும் உடற்பயிற்சி. 'பிசியோதெரபி' ஆகிய பலன்களைப் பெறுகின்ற வகையில் மதுரையில் சுமார் 60 செண்ட் இடத்தில் ரூ.25 இலட்சம் செலவில் புதிய கட்டட மையம் ஒன்றைக் கட்ட, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் நிதி ஒதுக்கித் தந்துள்ளது குறிப்பிடத் தக்கது. ●



# வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் -

# பல்துறைப் பணி விளக்க முகாம்

**ப**ல்துறைப் பணி விளக்க முகாம், வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம் திருப்பத்தூரில், பழைய பேருந்து நிலையத்தில் 10.10.1995 அன்று தொடங்கி 16.10.1995 முடிய சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் புலவர் திருமதி ஆர். இந்திர குமாரி அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்து, பல்துறைப் பணி விளக்கக் கண்காட்சி மற்றும் பல்துறைப் பணி விளக்க முகாமினைத் தொடங்கிவைத்து விழாப் பேருரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:

"பல்துறைப் பணி விளக்க முகாம்கள் பல்வேறு மாவட்டங்களில் அரசு நலத் திட்டங்களையும் சாதனைகளையும் விளக்குகின்ற வகையில் நடத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய தலைமையில் உள்ள அரசு தான், முதன் முதலாக இதுபோன்ற பல்துறைப் பணி விளக்க முகாம்களை நடத்தி வருகின்றது.

"இம்மாவட்டத்தில் மொத்தம் 420 கிராமங்களில், வீடியோ திரைப்படக்காட்சிகள் காண்பிக்கப்படும், 52 கிராமங்களில் கிராம மக்கள் பயன்பெறும் வகையில், அரசின் நலத் திட்டங்களை விளக்குகின்ற வகையில் கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள் நடத்தப்படவுள்ளன. இம்முகாம்களில் இலவசமாகக் குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசிகள், இலவசக் கண்சிகிச்சை முகாம், இலவசக் கால்நடை மருத்துவ முகாம், சொந்தமாகச் சுயதொழில் தொடங்குவது பற்றியும், குடும்பநலம் பற்றியும் முகாம்கள் நடத்தப்படும்" என்று குறிப்பிட்டார்.

"வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் 20 வீடியோ வாகனங்கள், பல்வேறு கிராமங் களுக்குச் சென்று அரசு நலத் திட்டங்களையும் சாதனை களையும் கிராம மக்களுக்கு விளக்கிடும் வகையில் வீடியோ திரைப் படம் காண்பிக்கப்படும்" என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்.

இப்பல்துறைப் பணி விளக்க முகாமில், தமிழ்நாடு தோல் வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு பாண்டுரங்கன், தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை வாரியத் தலைவர் திரு சி. கோபால், பேரணாம் பட்டு சட்டமன்ற உறுப்பினரும், தமிழ்நாடு சிறுசேமிப்புப் பொதுக்குழுத் துணைத் தலைவருமான திரு பரந்தாமன், காட்பாடித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி கே.எம். கலைச்செல்வி, அணைக்கட்டுத் தொகுதிச் சட்டமன்ற உறுப் பினர் திரு கே தர்மலிங்கம், வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தி யாளர்கள் சங்கத் தலைவர் திரு ப. நீலகண்டன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி னார்கள்.

முன்னதாக, இப்பல்துறைப் பணி விளக்க முகாம் தொடக்க விழாவில், திருப்பத்தூர் கோட்ட வளர்ச்சித் தலைவர் திரு அர, சக்திவேல் அவர்கள்அனை வரையும் வரவேற்றுப் பேசினார்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் தமது விளக்கவுரை யில் கூறியதாவது:

"இந்தப் பல்துறைப் பணி விளக்க முகாம்கள், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் சிதம்பரனார் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டங்களில் நடத்தப்பட்டன. கடந்த ஆண்டு, திருவண்ணாமலை சம்புராயர் மாவட்டம், திண்டுக்கல்-அண்ணா மாவட்டம், ...ப்புரம் இராமசாமி படை...ட்சியார் மாவட்டம் மற்றும் ப...ம்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் ஆகிய மாவட்டங் களில் நடத்தப்பட்டன.

"மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவின் பேரில், இந்த நிதி ஆண்டில் 10 மாவட்டங்களில் இதுபோன்ற முகாம்களை நடத்திட ஆணை பிறப்பித்து உள்ளார்கள். அதன் அடிப்படையில், புதுக் கோட்டை மாவட்டம், காமராஜர் மாவட்டம், நீலகிரி மாவட்டம், தர்மபுரி மாவட்டங்களில் ஏற்கெனவே பல்துறைப் பணி விளக்க முகாம்கள் நடத்தப் பட்டன. இந்தப் பல்துறைப் பணி விளக்க முகாம், வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம் திருப்பத்தூரில் தொடங்குவது இந்த ஆண்டின் ஐந்தாவது மாவட்டமாகும்.

"இதுபோன்ற பல்துறைப் பணி விளக்க முகாம்கள் பெரியார் மாவட்டம், தென்னார்க்காடு வள்ளலார் மற்றும் நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட உள்ளன."

---

## மூத்தோர் சொல்:

★ தேவைகள் குறைய குறையத் தான் தெய்வத்...ன்மையை அடைவோம்.

—...ாக்ரட்டீஸ்

★ மிகச் சிறந்த உண்மைகள் எளிமையாக உள்ளன. தலைசிறந்த மனிதர்களும் அப்படியே இருக்கின்றனர்.

—ஹேர்

★ ...ங்கள் எண்ணங்கள் ...ப்படியோ, அப்படித்தான் ...ங்கள் வாழ்க்கையும் ...புமையும்.

—மார்கஸ் அரேலியஸ்

★ சிறந்த இலட்சியங்களே! மானிட சாதியின் மாபெரும் முயற்சிகளே! வீரத் தன் மைகளே! அஞ்சா நெஞ்சர் களின் அரிய செய்கைகளே! நீங்கள் என் கடவுள்கள்.

—வால்ட் விட்மன்

விழா முடிவில், செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் துணை இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு மா. விசுவநாதன் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். விழாத் தொடக்கத்தில் கீதாலயா குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சி நடைபெற்றது. விழா முடிவில் திரைப்பட நடிகர் டைப்பிஸ்ட் கோபு குழுவினர் நடித்த "நல்லதே நடக்கும்" நாடகம் நடைபெற்றது.

பல்துறைப் பணி விளக்க முகாம் விழா மேடையில், தினமும் பள்ளி மாணவ மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகளும், செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் மூலமாக நாடகங்களும், நடத்தப்பட்டன.

பல்துறைப் பணி விளக்க முகாம் விழா மேடையில், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு துறையின் அலுவலர்களைக் கொண்டு ஒவ்வொரு துறை நாள் கொண்டாடப்பட்டது. இதில் கலந்துகொண்ட துறைகள் வருமாறு:

ஊரக வளர்ச்சித்துறை நாள்- 11.10.95, பொது சுகாதாரத்துறை நாள் - 12.10.95, சமூகநலத்துறை நாள் - 13.10.95, கல்வித்துறை நாள் - 14.10.95, சிறுசேமிப்புத் துறை நாள் - 15.10.95, தோட்டக் கலை, வனத்துறை நாள் - 16.10.95 என்று நாள்தோறும் அவ்வத்துறைகள் பற்றிய சாதனைகள் பொதுமக்களுக்கு விளக்கிக் கூறப்பட்டன.

பல்துறைப் பணி விளக்க முகாம் முடிவில், சிறந்த முறையில் அமைக்கப்பட்ட அரங்குகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. பட்டுக் கோட்டைப் போக்குவரத்துக் கழகத்திற்கு முதல் பரிசும், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் மற்றும் வனத்துறைக்கு இரண்டாவது பரிசும் கூட்டுறவுத் துறைக்கு மூன்றாவது பரிசும் வழங்கப்பட்டது. இப்பரிசுகளை, திருப்பத்தூர் கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு சக்திவேல் அவர்கள், செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் வழங்கினார்.

பல்துறைப் பணி விளக்க முகாம் கண்காட்சியில் செய்தித் துறை, தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம், கைத்தறித் துறை, கூட்டுறவுத் துறை, குடும்ப நலத்துறை, பொது சுகாதாரத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, வனத்துறை, மீன்துறை, கால்நடைப் பராமரிப்புத்துறை, பட்டு வளர்ச்சித் துறை, கதர் கிராமத் தொழில் வாரியம், வேளாண்மைத் துறை, சுற்றுலாத்துறை, தோட்டக் கலைத் துறை, சிறுசேமிப்புத் துறை, பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் ஆகிய துறைகள் சிறப்பான அரங்குகளை அமைத்திருந்தன.

## ஈயமற்ற பெட்ரோல்

**மா**சுக் கேட்டைத் தவிர்க்கும் விதமாக, ஈயம் கலவாதப் பெட்ரோல் விற்பனை இவ்வாண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து அறிமுகமாயிற்று. இதன் பயன்பாடு மெல்ல, மெல்ல அதிகரித்து வருகிறது. ஏப்ரல் ஜூலை ஆகிய மாதங்களில், நான்கு மாநகரங்களில் 3,228 மெட்ரிக் டன் ஈயக் கலப்பற்ற பெட்ரோல் விற்பனையாகியுள்ளது. தில்லிக்கு 2,166 மெட்ரிக் டன். பம்பாய்க்கு 606 மெட்ரிக் டன், சென்னைக்கு 234 மெட்ரிக் டன், கல்கத்தாவுக்கு 224 மெட்ரிக் டன்.

ஈயக் கலப்பற்றப் பெட்ரோலைப் பயன்படுத்து முன், கார்களில் Catalytic converter சாதனம் பொருத்தப்பட வேண்டும். தில்லியில், இந்த நான்கு மாதங்களில், இந்தச் சாதனம் பொருத்திய 13,905 கார்கள் விற்கப்பட்டுள்ளன. பம்பாயில் 4,411 கார்களும், கல்கத்தாவில் 1,848 கார்களும் விற்பனையாகியுள்ளன.

தில்லியிலுள்ள மொத்தம் 261 பெட்ரோல் விற்பனை மையங்களில் 84-இல் ஈயக் கலப்பற்ற பெட்ரோல் விற்கப்படுகிறது. பம்பாயில் 255-க்கு 35-லும், கல்கத்தாவில் 192-க்கு 31-லும், சென்னையில் 165 இல் 10-இல் மட்டுமே ஈயமற்ற பெட்ரோல் விற்பனையாகிறது. இவை தவிர, நாட்டின் நெடுஞ்சாலைகளில் இத்தகைய 29 நிலையங்கள் இயங்குகின்றன. சென்னையிலிருந்து வெளியே செல்லும் நெடுஞ்சாலைகளில் இத்தகு நான்கு விற்பனை நிலையங்கள் உள்ளன.

வரும் 1998-ஆம் ஆண்டுக்குள் அனைத்து மாநிலத் தலைநகரங்களிலும், வரும் 2000-வது ஆண்டில் நாடு முழுவதிலும், ஈயக் கலப்பற்ற பெட்ரோல் கிடைக்கும்.

—அமெரிக்கத் தகவல் நிலையம்

# ஏழை எளியோர் ஏற்றம் பெற கதர் வாங்குவீர்!

### மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்
## திரு. பெ. ஈஸ்வரமூர்த்தி அவர்கள்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாசியுடன், அண்ணல் காந்தியடிகளின் 126-வது பிறந்த நாள் விழாவினை 2.10.95-இல் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் சிறப்பாகக் கொண்டாடுகிறது.

கடந்த 35 ஆண்டுகளாக இவ்வாரியம் கிராமப்புறக் கைவினைஞர்களின் முன்னேற்றத்தினை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சிக் காலத்தில் வாரியத்தின் வளர்ச்சிப் பணிகள் பன்மடங்கு அதிகரித்து வந்துள்ளன. உற்பத்தி, விற்பனை, வேலைவாய்ப்பு அளித்தல், திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்துதல் ஆகியவற்றில் இவ்வாரியம் சிறப்பான முன்னேற்றித்தினை அடைந்துள்ளது. நிர்வாகக் கட்டமைப்பிலும், திட்டங்களைத் திறமையாகச் செயல்படுத்துவதிலும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் இந்தியாவின் மற்ற வாரியங்களுக்கு முன்னோடியாகவும், எடுத்துக்காட்டாகவும் திகழ்கிறது.

1993-94-ஆம் ஆண்டின் புள்ளி விவரப்படி, கதர் உற்பத்தியிலும் கிராமத் தொழில் பொருட்கள் உற்பத்தியிலும் மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் முதலிடம் வகிக்கிறது என்பது பெருமைப்படத் தக்கதாகும். இந்தப் பெருமையைப் பெற்றுத் தந்தவர், நமது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களாவார்.

வாரியத்தின் திட்டங்கள் அனைத்தும் கீழ்க்காணும் மூன்றடுக்கு முறையில் செயல்பட்டு வருகின்றன :

1. வாரியத்தின் சொந்த அலகுகள் - 1,290

2. வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் - 1,880

3. வாரியத்தின் மூலம் நிதி உதவி பெற்றுள்ள கைவினைஞர்கள் - 79,734

1995-96-ஆம் ஆண்டில் ரூ.53.50 கோடிக்குக் கதர் ரகங்களும், ரூ.354 கோடிக்குக் கிராமத் தொழில் பொருட்களும் ஆக மொத்தம் ரூ.407.50 கோடிக்குக் கிராமத் தொழில் பொருட்களும் உற்பத்தி செய்திட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

1995-96-இல் ரூ.46 கோடிக்குக் கதர் ரகங்கள் விற்பனை செய்யவும், ரூ.453 கோடிக்குக் கிராமத் தொழில் பொருட்கள் விற்பனை செய்யவும் இலக்குகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. நிர்ணயிக்கப் பட்டுள்ள விற்பனை இலக்குகளை அடைந்திடத் தேவையான நடவடிக்கைகள் இவ்வாரியத்தில் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இவ்வாரியத்தின் மூலம் இதுவரை வேலை வாய்ப்புப் பெற்றுள்ளோர் 14,31,000 பேர். இதில் மகளிர் மட்டும் 4,96,510 பேர். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 3,16,000 பேர். இவர்கள் அனைவரும் கிராமப்புற ஏழை, எளிய மக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஏழை மக்களின் வாழ்வை வளம் பெறச் செய்வதில் புரட்சித் தலைவி அவர்களின் அரசு மிகுந்த அக்கறை காட்டி பல்வேறு திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்தி வருவதால்,

இத்தனைப் பெரிய அளவில் வேலைவாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது.

பம்பாய் கதர் ஆணைக்குழு வரும் மூன்றாண்டுக் காலத் திற்குள் ரூ.5,600 கோடி செலவினத்தில் 20 இலட்சம் ஊரகக் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத் திடத் திட்டமிட்டுள்ளது. இச் செலவினத்தில் மூன்றில் ஒரு பங்கினை, கதர் ஆணைக் குழுவும், ஏனையத் தொகையை நிதி நிறுவனங்களும் ஏற்கும்.

உள்நாட்டில் அதிக அளவு விற்பனை செய்வதோடு, அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது போன்றவையும் அடங்கும்.

கதர்த் திட்டத்தின் கீழ் கதர் நூல் உற்பத்தி, கதர்ப் பட்டு, கம்பளி மற்றும் பாலியஸ்டர் ரகங்கள் உற்பத்திக்கு முதலீடு களுக்குத் தேவையான நிதி கோரப்பட்டுள்ளது. கிராமத் தொழில் பிரிவின் கீழ் அலுமினியப் பொருட்கள், உணவுப் பொருட்கள் பக்குவப் படுத்துதல், பிளாஸ்டிக்

தொழில் ஆணைக்குழுவால் மாநிலக் கதர் கிராமத் தொழில் வாரியங்கள் மூலமாகவும், கதர் கிராமத் தொழில் நிறுவனங்கள் மூலமாகவும், பல சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன.

தமிழ்நாட்டில் காமராஜர் மாவட்டம் நரிக்குடி, சிதம்பரனார் மாவட்டம் விளாத்திக்குளம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் சிங்கம்புனரி, தர்மபுரி



தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ரூ.676.32 கோடி மதிப்பீட்டில் 2.09 இலட்சம் கைவினைஞர்கள் வேலைவாய்ப்புப் பெறும் பொருட்டுத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டம் பம்பாய் கதர் ஆணைக்குழுவின் பரிசீலனை யில் உள்ளது. இத்திட்டத்தில் உற்பத்தி அளவினை இரண்டு மடங்கு உயர்த்துவதும், கதர் கிராமத் தொழில் பொருட்களை

பொருட்கள், தோல் பொருட்கள், தேனீ வளர்த்தல், மின்னணுப் பொருட்கள் மற்றும் விற்பனைக் கூடங்களுக்குத் தேவையான நிதி உதவியும் கோரப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு, அண்ணல் காந்தியடிகளின் 125-வது பிறந்தநாளையொட்டி அகில இந்திய அளவில் 125 ஊராட்சி ஒன்றியங்கள் தேர்வு செய்யப் பட்டு, பம்பாய் கதர் கிராமத்

மாவட்டம் பர்கூர், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் - ஜவ்வாதுமலை ஆகிய 5 ஊராட்சி ஒன்றியங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் தொகுதியில் உள்ள பர்கூர் ஊராட்சி ஒன்றியத்தில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்

# பள்ளிகளில் கணிணி அறிவு மற்றும் பயிற்சித் திட்டம்

வளர்ச்சி அடைந்த மேலை நாடுகளுக்கு இணையாக நமது நாட்டிலும் கம்ப்யூட்டர் புரட்சி நடைபெற்று வருவதாலும், அனைத்துத் துறைகளிலும் கம்ப்யூட்டர்கள் புகுத்தப்பட்டு "கணிணிப் பயிற்சி" (Computer Training) இன்றி எதிர்காலத்தில் எந்தத் துறையிலும் முழு வளர்ச்சியை அடைய முடியாது என்ற கருத்தின் அடிப்படையிலும், தமிழ்நாட்டில் பள்ளி அளவில் கணிணிப் பயிற்சி விரைந்து அளிக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே வெளியிட்டிருந்தார்.

இந்தக் கம்ப்யூட்டர் பயிற்சியானது இளைய தலைமுறையினருக்குப் பள்ளிக் கல்வி அளவிலேயே அளிக்கப்பட்டால் தான் அவர்களுடைய மேற்படிப்புக்கும், அவர்கள் மேற்கொள்ள இருக்கின்ற தொழில் முயற்சிகளுக்கும் உதவிகரமாக இருக்கும் என்ற கொள்கையின் அடிப்படையில், பள்ளிகளில் "கணிணி அறிவு மற்றும் பயிற்சித் திட்டம்" (Computer Literacy and Studies in class) அதாவது "CLASS" என்று பெயரிடப்பட்ட திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு, அதைச் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், 170 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின்படி, தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 25 பள்ளிகளில் "கணிணிப் பயிற்சி" (computer Training) நடப்பு ஆண்டில் அளிக்கப்படும். இதற்கான கணிணிகளும் அதற்குத் தேவைப் படுகின்ற உபகரணங்கள் மற்றும் பயிற்சிச் சாதனங்களும், தமிழ்நாடு அரசு நிறுவனமான ELCOT மூலமாக வழங்கப்படும். இந்தக் கணிணி பயிற்சியானது விரைந்து மாணவ மாணவியர்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டுமென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

---

வாரியம் மற்றும் புதிதாக 1546 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும் திட்டங்கள் பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவின் பரிசீலனையில் உள்ளன. இத்திட்டத்திற்குக் கதர் ஆணைக்குழு, ஊரக வளர்ச்சித் திட்டம், மற்றும் வங்கிகள் மூலமாக நிதி ஆதாரங்கள் திரட்டப்பட்டு பர்கூர் ஊராட்சி ஒன்றியத் தீவிர மேம்பாட்டுத் திட்டமாக, அண்ணல் காந்தியடிகளின் 125-வது பிறந்தநாளான 2.10.94 அன்று அறிவிக்கப்பட்டது.

இதன் முதற்கட்டமாக 3 கதர் நூற்பு நிலையங்கள் தொடங்கப்பட்டன. அவை 1. திப்பனூர், 2. கொரகுப்பம், 3. ஜெகதேவி ஆகிய கிராமங்களில் இயங்கி வருகின்றன. இதன் மூலம் 90 பெண்கள் வேலை வாய்ப்புப் பெற்று வருகின்றனர்.

மேலும் நரிக்குடி, விளாத்திகுளம், சிங்கம்புனரி, ஜவ்வாது மலை, ஆகிய 4 ஊராட்சி ஒன்றியங்களில் கதர் கிராமத் தொழில் நிறுவனங்கள் மூலம் திட்டங்கள் நிறைவேற்றப் படுகின்றன.

தமிழ்நாட்டில் கதர் கிராமத் தொழில்கள் மூலம் புதிய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திட மாவட்டச் சிறப்பு வேலைவாய்ப்புத் திட்டம் திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் தற்போது கதர் கிராமத் தொழில் நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டம் மேலும் பல மாவட்டங்களில் அறிமுகப்படுத்திடக் கதர் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த ஆண்டில் 1995-96-இல் 2,000 காலணிப் பணிக்கூடங்கள் மற்றும் தையல் இயந்திரங்கள் இலவசமாகக் காலணித் தொழில் செய்பவர்களுக்கு வழங்கப்படவுள்ளன. ஒவ்வொன்றும் ரூ.10,000 மதிப்புள்ளது. இதற்கு மொத்தம் ரூ.2 கோடி அரசு அனுமதித்துள்ளது. கொளுத்தும் வெயிலிலும், கொட்டும் மழையிலும் துன்புற்று வாடும் 2,000 ஏழை அருந்ததியினர் இனி நல்ல வசதியுடன் பொருள் ஈட்டலாம்.

இதுவரை அதிகப்பட்சம் 12 கதர் இராட்டைகளதான் நூற்புப பணிக்குப் பயன்படுத்தப்பட்டு வந்தன. இனி, புதிதாக 48 கதர் இராட்டைகளை உருவாக்கி அறிமுகப்படுத்திட, பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணையம் ஒப்புதல அளித்துள்ளது. தமிழ்நாடு அரசு நடப்பு ஆண்டு, 48 கதர் இராட்டைகளில் நூல் உற்பத்தி செய்திட, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு அனுமதித்துள்ளது.

பனைத் தொழிலாளர்கள் சுலபமாகப் பனை மரம் ஏறுவதற்காக, நவீன மரம் ஏறும் சாதனங்கள் (Palm Tree Climbing device) 1,000 பேருக்கு ஒவ்வொன்றும் ரூ.1,000 செலவில் இலவசமாக அரசு அனுமதித்துள்ளது. இது நடப்பு ஆண்டில் நிறைவேற்றப்படும்.

இவ்வாண்டு அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாளான 2.10.95 அன்று முதல் தீபாவளிப் பண்டிகை முடிய ரூ.44.98 கோடிக்கு இவ்வாரியத்தின் மூலம் கதர்த் துணி ரகங்கள் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

குறளகத்திலுள்ள காதி கிராப்டிலும் சென்னை நகரத்திலுள்ள இதரக் காதி கிராப்டுகளிலும் தீபாவளிப் பண்டிகைக் காலத்தில் சுமார் ரூ.8.04 கோடிக்குக் கதர் ரகங்கள் விற்பனை செய்ய குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் 225 காதி கிராப்டுகள் மூலமும், 4 பட்டு எம்போரியங்கள் மூலமும் பல்வேறு தற்காலிகக் காதி கிராப்டுகள் மூலமாகவும் பெரும் அளவில் கதர் ரகங்கள் விற்பனை செய்யப்படவுள்ளன. புத்தம் புதிய நவீன ரகங்களில் 100 சதவிகிதப் பட்டுச் சரிகைப் புடவைகளும், பாலியஸ்டர் மற்றும் கதர் ரகங்களும் ஏராளமாக இவ்வாண்டு விற்பனைக்குத் தயாராக உள்ளன.

கதர்ப் பாலியஸ்டர் நெய்வோரின் நாள் ஊதியம் ரூ.23 லிருந்து ரூ.28 பெறுவதற்கு ஏதுவாக 1994-95-ஆம் ஆண்டில் தலா ரூ.1,500 பெறுமானமுள்ள நவீன தறியும், பிற உபகரணங்களும், 500 நெசவாளர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இதேபோல் 1995-96-ஆம் ஆண்டில் 500 நெசவாளர்களுக்கு நவீன தறிகளும் பிற உபகரணங்களும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த செலவினம் ரூ.7.50 இலட்சமாகும்.



1994-95-ஆம் ஆண்டில் புதிய வடிவமைப்பில் பட்டு நெய்து அதிக ஊதியம் பெறுவதற்கு ஏதுவாக ஒவ்வொன்றும் ரூ.600 பெறுமானமுள்ள இரண்டு ஜாக்குவார்டுப் பெட்டிகள் வீதம் 300 பட்டு நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதே போல் 1995-96-ஆம் ஆண்டிலும் 60 கதர்ப் பட்டு நெசவாளர்களுக்கு ஜாக்குவார்டுப் பெட்டிகள் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மொத்தச் செலவினம் ரூ.7.20 இலட்சமாகும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் மட்டும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் 5.37 இலட்சம் கிராமப்புற மக்களுக்குக் கூடுதலாக வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பது மிகவும் பெருமைப் படத்தக்கதாகும்.

பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைத்தால்தான், இந்தக் கதர் விற்பனை இலக்கை எய்த முடியும். கதர்த் துணியின் மதிப்பிலும் பெரும்பகுதி அதனை உற்பத்தி செய்யும் ஏழை மக்களுக்கே ஊதியமாகப் போய்ச் சேருகிறது. அதிக அளவில் கதர் ரகங்களை வாங்கி இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள பல்லாயிரக்கணக்கான ஏழை மக்கள் வாழ்வு வளம் பெற உதவும்படி, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அனைவரையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறது.

# சிறு குடும்பம் போதுமே!

—கவிஞர் வி.மு. உலகநாதன்





சிறு குடும்பம் போதுமே - அது
    சிறந்த தாகுமே    (சிறு)

இருமக்களுக்குமேல் பிறவாமை கண்டு
    இன்பந் துய்த்துமே வாழ    (சிறு)

வறுமை அடையாமல்
    வாய்த்த வருவாயில்
வளமோடு தோன்றும் நாளும் - இன்ப
    அறிவில் புகழ்பெற்று
அன்பில் தலைப்பட்டு
    அமைதிநல மேவும் குடும்பம்    (சிறு)

கடனரக்கன் வீழ
    கவலைப் பேய் மாய
களிப்புக் கடல்நீந்தித் திளைக்கும் - என்றும்
    கடமை நனிபோற்றிக்
கண்ணியம் நெறிகாக்கும்
    கட்டுப்பாடுடைய குடும்பம்    (சிறு)

வேலையின்றி நாட்டில்
    வருந்தும் துயர்மாற்றி
விழுப்பம் படர்ந்தோங்கச் செய்யும் - பசும்
    சோலை எழில்போலச்
சுபீட்சக் கனிதோன்றித்
    துய்க்கத் தந்திடும் குடும்பம் (சிறு)







# புதிய கற்கால மக்கள் வாழ்ந்த இடம் கண்டுபிடிப்பு!

தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம், செஞ்சி அருகே சோழங்குணம் என்னும் கிராமத்தில் புதிய கற்கால மக்கள் வாழ்ந்த இடங்களைக் கண்டுபிடித்துள்ளது. இவ்வாழ்விடங்களில் புதிய கற்காலக் கருவிகள் சிலவும் குத்துக்கல் என்று கூறப்படும் வட்டமான கல் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. சமத்தகுப்பம் என்ற ஊரைச் சேர்ந்த திரு ஈஸ்வர முதலியார் அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் தொல்பொருள் ஆய்வுத்துறைப் பதிவு அலுவலர் திரு மா. சந்திரமூர்த்தி அவர்கள் இவ்விடத்தைக் கண்டறிந்து புதிய கற்காலக் கருவிகளைச் சேகரித்துள்ளார்.

இங்கு கிடைத்துள்ள கோடாரி, சுரண்டிகள், உளி போன்ற கருவிகளைக் கொண்டு இப்பகுதியில் வாழ்ந்த புதிய கற்கால மக்கள் காய்கனிகளை உண்டும், வேளாண்மை செய்தும் உயிர் வாழ்ந்திருக்கலாம் என்று கருத முடிகிறது. செஞ்சிப் பகுதியில் புதிய கற்கால வாழ்விடங்களைக் கண்டறிந்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

இதுகாறும், தமிழ்நாட்டின் வடபகுதிகளான சேலம், தருமபுரிப் பகுதிகளில் மட்டும் புதிய கற்கால மக்கள் வாழ்விடங்கள் இருந்துள்ளன என்ற கருத்தினை மாற்றும் வகையில் இப்புதிய கண்டுபிடிப்பு அமைந்துள்ளது. கி.மு. 3000 2000 ஆம் நூற்றாண்டுகளில் புதிய கற்கால மக்கள் சேலம், தருமபுரிப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து செஞ்சிப் பகுதிக்கு வந்து தங்கியிருக்கலாம் என்று கருதவும் இடமேற்படுகிறது. மேலும், மேற்கூறிய கருவிகள் அனைத்தும் வட்டமான தரைப்பகுதியில் கிடைத்திருப்பதால் புதிய கற்கால மக்கள் வட்டமான குடிசைகளில் வாழ்ந்துள்ளனர் என்பது இதன் மூலம் உறுதியாகிறது.

இப்பகுதியில் புதிய கற்கால வாழ்விடங்களை மேலும் கண்டறிவதற்காகத் தொல்பொருள் ஆய்வுததுறை விரிவான வகையில் கள ஆய்வு செய்யவும் அதன் மூலம் புதிய கற்கால மக்களின் பண்பாட்டைப் பற்றி விளங்கிக் கொள்ளவும் திட்டமிட்டுள்ளது.

**நல்லவனாய் இரு!**

★ **நல்லவன் எப்படியிருக்க வேண்டுமென்று அறிவுரை செய்யாதே. நீயே நல்ல வனாய் இருந்து விடு!**

**—மார்க்கஸ் அரேலியஸ்**

**நற்செயல்**

★ **பல நல்ல செயல்களை மறைப்பதற்கு ஒரு சில தீய செயல்கள் போதும்.**

**—புளூட்டார்ச்**

# கலை உலகம் போற்றும் கலைமாமணி

**சு. தங்கவேலு**
**உதவி இயக்குநர்**
**அரசு அருங்காட்சியகம்**
**சென்னை**

ஆனந்த கென்டிஸ் குமாரசாமி ஆகஸ்டு 22, 1877-ஆம் ஆண்டு கொழும்பில் பிறந்தார். இவருடைய தகப்பனார் சர் முத்துக்குமாரசாமி புகழ்மிக்க யாழ்ப்பாணத் தமிழர். இவருடைய தாயார் இலிசபெத் கிளே பீபி, இங்கிலாந்து நாட்டில் கென்டிஸ் என்னுமிடத்தில் மேட்டுக்குடியில் பிறந்தவர்.

குழந்தையும், திருமதி முத்துக் குமாரசாமியும் இங்கிலாந்தில் இருந்தபோது, சர் முத்துக் குமாரசாமி திடீரென்று மாரடைப்பால் கொழும்பில் காலமானார். இந்த அதிர்ச்சி யிலிருந்து மீண்ட திருமதி முத்துக் குமாரசாமி இங்கிலாந்தில் தங்கி ஓராண்டு ஒன்பது மாதங்களே ஆன ஆனந்தை உருவாக்குவதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். ஆனந்து முதலில் வீட்டிலும், பின் வேகிளிப்ப கல்லூரியிலும் பயின்றா பின்னர் இலண்டனில் உள் பல்கலைக்கழகக் கல்லூரியி பி.எஸ்ஸி., புவியியல் படித்து சிறப்பாகத் தேறினார்.

26 வயதே ஆன ஆன 1903-இல் இலங்கைக் கனி பொருள் அளவை இயக்கத் தின் இயக்குநராக நியமிக்கப் பட்டார். 'தோரியனைட்' மற்றும் 'செரின்டிபைட்' ஆகிய கனிமங் களைக் கண்டுபிடித்துச் சிறந்த சாதனை புரிந்தார். மேலும், பல புவியியல் கட்டுரைகளை எழுதிப் பலராலும் பாராட்டு தலைப் பெற்றார். இலங்கைப் புவியியல் மேற்கொண்ட ஆய்வுக்காக இவருக்கு டி.எஸ்ஸி., பட்டம் இலண்டன் பல்கலைக் கழகத்தால் அளிக்கப்பட்டது.

கனிமங்களைக் கண்டு பிடிக்கும் நோக்கத்துடன் நாட்டின் பல பாகங்களுக்கும் பயணம் மேற்கொண்டார். அப்போது கண்டி மற்றும் பிற சிங்களக் கைவினைஞர்களைச் சந்திக்கும் சந்தர்ப்பம் அவருக்கு ஏற்பட்டது. மேலும், இலங்கை அருங்காட்சியகத்துடன் தொடர்பு வைத்திருந்த காரணத்தால், இலங்கை மற்றும் இந்தியக் கலையையும் கைவினைப் பொருட்களையும் அறியக்கூடிய வாய்ப்பும் இவருக்கு டியது. இதனால் இவர் கலை வரலாறு, வரலாறு, தத்துவம் களில் ஆர்வம் ஏற்பட்டு புவியியலைப் புறக்கணிக்கக் காரணமாக அமைந்தது.

இலங்கையிலும் இவருடைய வாழ்க்கையின் நோக்கம் மாறியது. இவர் பயிற்சியினால் விஞ்ஞானியாக இருந்தாலும், ஆர்வத்தினால் கலையைப் போற்றும் கலா ரசிகராக விளங்கினார்.

இந்தியக் கலையும் கைவினைப் பொருட்களும் அந்நிய ஆதிக்கத்திலிருந்து உயிர் பெற்றாலும், இயந்திரங்களின் வருகையாலும், அந்நிய அரசின் ஆதரவின்மையாலும் அழியக் கூடிய நிலைக்கு ஆளானது. இவர் இயந்திரங்களைக் கொண்டு, ஒரே மாதிரியான



# மலைவாழ் மக்களின் இருப்பிடங்களுக்கே சென்று அத்தியாவசியப் பொருள்கள் வழங்க ஏற்பாடு

மலைப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் குறிப்பாக மலை ஜாதியினர், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப் படுகின்ற எல்லா அத்தியாவசியப் பொருள் களைப் பெறுவதற்கு எல்லா நடவடிக்கை களையும் மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணையிட் டுள்ளார்.

மலைப் பகுதிகளில் வாழும் மக்கள் அத்தியாவசியப் பண்டங்களைப் பெற இனி "நடமாடும் நியாய விலை அங்காடிகள்" அமைத்து அத்தியாவசியப் பொருள்களை அவர்கள் வசிக்கின்ற இடங்களுக்கே கொண்டு சென்று வழங்க வேண்டும் என்றும் அதற்குத் திட்டம் தீட்டிச் செயல்படுத்தவும் கருத்துத் தெரிவித்திருந்தார்.

அதன்படி, தற்போது முதல் கட்டமாக, தமிழ்நாட்டில் சேலம் மாவட்டதிலுள்ள கொல்லி மற்றும் கல்ராயன் மலைப்பகுதி களிலும், தென்ஆர்க்காடு வள்ளலார் மாவட்டத்தில் உள்ள கல்ராயன் மலை பகுதிகளில் உள்ள மலைவாழ் பகுதி மக்களுக்கு, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருள்கள் வழங்க 3 "நடமாடும் நியாய விலை அங்காடிகள்" அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 12,00,000 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் வேன்களில் அத்தியாவசியப் பொருள்கள் மலைப் பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு அவர்களின் இல்லங்களிலேயே அவை வழங்கப்படும். இதன் மூலம் இதுவரை தங்களது இருப்பிடங்களைக் கடந்து, நெடுந்தூரம் சென்று அத்தியாவசியப் பொருள்கள் வாங்க வசதியற்ற சுமார் 40,000 மக்கள் பயன் பெறுவார்கள்.

---

எண்ணற்ற பொருட்களை உற்பத்தி செய்வதை விரும்ப வில்லை. மாறாக, கலையம்சத் தில் வேறுபட்ட கைவினைஞர் களின் கற்பனையில் உருவாகும் பொருட்களையே விரும்பினார். இப்படிக் கலையும் கலையம் சமும் மிக்க பொருட்கள் இல்லங்களில் இல்லாமல், அருங்காட்சியகங்களில் மட்டுமே காட்சிக்கு வைக்கப்பட்டிருப் பதைக் கண்டு வருத்தப்பட்டார். கைவினைஞர்களின் கைவன் மையால் உருவாகும் கலைப் பொருட்களைப் பேணிப் பாது காக்கப்பட வேண்டுமென்றும், அக்கலை எவ்வகையிலும் அழிய இடமளிக்கக் கூடாது என்ற கருத்தையும் இவர் மேற் கொண்டிருந்தார்.

இவரது நண்பர்களும் உறவினர்களும் நமது கலையை யும் பண்பாட்டையும் புறக் கணித்து, அந்நிய நாகரிகத்தில் அமிழ்ந்திருந்தது இவருக்கு வருத்தத்தைக் கொடுத்தது. இந்தியப் பண்பாட்டைப் பரவச் செய்யும் நோக்குடன் இவர் இந்திய ஆடையைத் தலைப் பாகையுடன் அணிந்து வரலானார். இவ்வாறு இந்தியப் பண்பாட்டின் மேன்மையை உலகறியச் செய்தார்.

1906-ஆம் ஆண்டு இறுதியில் இவர் இயக்குநராகப் பணி புரிந்து, ஒப்பந்தம் முடிந்த தறுவாயில், இலங்கையை விட்டு இந்தியாவிற்கு மூன்று மாதப் பயணம் மேற்கொண்டார். அப்போது மேலும் இந்தியச் சிற்பங்கள், சித்திரங்கள், கைவினைப் பொருட்கள் ஆகிய வற்றை அறிய, இவருக்கு வாய்ப்புக் கிட்டியது. வாரணாசி யில் அருங்காட்சியகம் அமைக் கப்படுமேயானால், தான் சேகரித்த அனைத்துக் கலைப் பொருட்களையும் அதற்குப் பரிசாக அளிக்க முன் வந்தார். மேலும், இந்துப் பல்கலைக்

கழகத்தில் கலை பண்பாட்டுத் துறைப் பேராசிரியராகப் பணியாற்ற விருப்பம் தெரிவித்தார். ஆனால், இவரது விருப்பம் நிறைவேறவில்லை. இவர் ஐரோப்பிய நாகரிகத்தை விமர்சித்தக் காரணத்தால் அப்போதிருந்த ஆங்கிலேய அரசு இவரது கனவு நனவாக எந்த உதவியும் புரியவில்லை.

அதிர்ஷ்டவசமாகப் பாஸ்டன் நுண்கலைக் கூடத்தின் அறங்காவலர் டென்மன் ராஸ், இவரது கலைப்பொருட்கள் அனைத்தையும் விலை கொடுத்து வாங்கியதுடன், அங்கு ஆராய்ச்சியாளராகப் பணி புரியவும் வழிவகை செய்தார். பாஸ்டனில் பணிபுரிய நேர்ந்தது இவரது' வாழ்க்கையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. இவர் இந்தியப் பாரசீக மற்றும் முகமதியக் கலைகளுக்குக் காப்பாளராகப் பணிபுரிய வாய்ப்புக்கிடைத்தது.

தனது கட்டுரைகளின் மூலம் நடராசர் சிலையின் மகத்துவத்தை உலகறியச் செய்த பெருமை ஆனந்த குமாரசாமியைச் சேரும். சிவ நடனத்தின் கருப்பொருளை இவர் மூவகையில் விளக்கினார். ஒன்று, சிவனுடைய ஆனந்த நடனம் அண்டத்தில் எல்லா அசைவுகளுக்கும் காரணமென்பதை திருவாசி எடுத்துக்காட்டுவதாகவும் இரண்டாவதாக, இந்த நடனத்தினால் எண்ணற்ற ஆத்மாக்கள் மாயையிலிருந்து விடுபடுவதாகவும் மூன்றாவதாக, இந்த நடனம் நடைபெறுவது பிரபஞ்ச மத்தியில் உள்ளத்தின் உள்ளடங்கிய சிதம்பரம் ஆகுமென்றும் விளக்கினார்.

ஆனந்த குமாரசாமி பரதநாட்டியத்தைப் போன்ற தரமான நமது நடனத்தைத் தனது கட்டுரைகளின் மூலமாகவும், தான் தயாரித்த படங்களின் மூலமாகவும், அமெரிக்கா மட்டுமல்லாமல் மற்ற உலக நாடுகளும் அறியச் செய்தார். அவரது அரும்பெரும் முயற்சியால் மேற்கத்திய நாடுகள் பரதநாட்டியம் மற்றும் தரமான பிற நடனங்களையும் கர்நாடக இசையையும் அறிந்துகொள்ளவும் பாராட்டவும் முற்பட்டனர்.

கலையும் கலையம்சமும், அலெக்சாண்டர் நமது நாட்டின் மீது படையெடுத்தபோது அறிமுகப்படுத்தப்பட்டதாக பெரும்பாலான நுண்கலை மற்றும் இந்தியப் பண்பாட்டு விற்பன்னர்களும் நம்பியிருந்தனர். அவர்களின் கூற்றுப்படி, புத்தரின் உருவம் கிரேக்க-புத்தர் கலைப்பள்ளியில் தோன்றியதாகும். பெரும்பாலான திறனாய்வாளர்கள் இதனை ஏற்றுக்கொண்ட நிலையில், டென்மார்க் நாட்டின் தலைநகரான கோபன்ஹேகனில் நடந்த கருத்தரங்கு மாநாட்டில், ஆனந்த குமாரசாமி ஆதாரத்துடனும் ஆணித்தரமாகவும் இது இந்திய வழி வந்ததென்பது விளக்கிக்கூறி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார்.

இந்தியா, இந்தோனேசியா மற்றும் ஆசிய கலைகளைப் பற்றி 500-க்கும் மேற்பட்ட புத்தகங்களையும் கட்டுரைகளையும் தனது 30 ஆண்டு பாஸ்டன் அருங்காட்சியகச் சேவையில் எழுதிய சிறந்த தத்துவ மேதையாகவும் விளக்கமளிக்கும் வித்தகராகவும் விளங்கினார். அவரது புத்தகங்கள் அனைத்தும் அவரது அறிவுக்கூர்மையையும், புலமையையும் பறைசாற்றுவனவாக அமைந்துள்ளன. பொதுவாக, ஆசியா, குறிப்பாக, நமது நாட்டின் மதம், பண்பாடு, கலைகளைத் தனது திறமையினால் அறியச் செய்ததற்காக நாம் அவருக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளோம்.

அவர் பணியிலிருந்து ஓய்வுபெற்றபின், தனது இறுதிகாலத்தை இமயமலையில் கழிக்க எண்ணியிருந்த நேரத்தில், திடீரென்று செப்டம்பர் 7, 1947-இல் நீதம், மாஸேசூட்ஸில் இருந்த தனது இல்லத்தில் இயற்கை எய்தினார்.

சிவனது நாட்டியத்திற்கு விளக்கமளித்ததற்காகவும், இராஜபுத்திரச் சித்திரங்களை அடையாளம் காட்டியதற்காகவும், புத்தரின் உருவம் தோன்றிய மூலத்தைக் கூறியதற்காகவும், இந்தியக் கலையின் அறிகுறியைக் காட்டியதற்காகவும் அவரது புகழ் என்றும் நிலைத்திருக்கும்.

☆ **சிக்கனம் நல்லதுதான். அத்துடன் வள்ளன்மையும் சேர்ந்திருக்க வேண்டும்.**

**—பென்**

☆ **வாழ்க்கை என்பது உருகி மறைந்து போகும் மெழுகு வர்த்தியல்ல, அது ஒரு அற்புதத் தீபம் ஆகும்.**

**—பெர்னாட்ஷா**

# விண்ணின் அளவு பெண்ணின் பெருமை பாடிய கண்ணின் மணிக்கவி எங்கள் கவிமணி!



-கவிஞர் குருவிக்கரம்பை சண்முகம்

**அன்னைத் தமிழுக்கு வணக்கம்**

இங்குள்ளோர் அனைவருக்கும் என் வணக்கம்.
மூத்த தமிழுக்கு முன் வணக்கம்
எங்கள் தமிழ்த் தாயே
தலைச் சங்கத்தில் நீதலையழகு காட்டினாய்
இடைச் சங்கத்தில் நீ இடையழகு காட்டினாய்
கடைச் சங்கத்தில் நீ கண்ணின் கடையழகு காட்டினாய்.
நஞ்சையும் புஞ்சையும் நாலாபுறத்திலும்
நெஞ்சையே அள்ளும் தஞ்சையில் இன்று உன்
செஞ்சொல் வளம் காட்டினாய்
இன்ப சுகத்தையே கூட்டினாய்
என் இதயத்தை என்றும் நீ வீணையாய்
மீட்டினாய்; நல்வழி காட்டினாய்
உன்னை வணங்குதற்கு என் பெயருக்கு ஏற்ப
பன்னிரு கைகள் இருந்தாலும் போதாது.
ஆதலால் தமிழ்த் தாயே.
என்னிரு கைகளால் இதயத்தால் வணங்குகிறேன்.
என் கவியைத் தொடங்குகிறேன்.

**மாண்புமிகு முதல்வருக்கு வணக்கம்**

மதுரை மீனாட்சி.
தான் கருப்பாய், பச்சையாய் இருக்கிறோம் என்ற தன்
மனக்கவலை தீர மண்ணில்சிவப்பாய்ப் பிறக்க சிந்தித்துப்
பிறந்ததுபோல் இருக்கும்
எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி
அவர்களே.
புரட்சித் தலைவியின் காலடித் தாமரைகள
நிலத்தில் பட்டதால் அன்றோ
பொய்கையில் மட்டுமே தாமரைப் பூக்கள் பூக்கும்
என்பது பொய்யாய்ப் போனது.
புரட்சித் தலைவியின்
கார்கூந்தலுக்குத் தோற்றுப் போனதால் அல்லவா
கார் மேகங்கள் தொடர்ந்து மழையைக்
கப்பமாய் இப்பொழுதெல்லாம் தவறாமல் கட்டி
வருகின்றன.
இந்த மார்கழி மாதத்திலும்
தமிழ்நாட்டில் தமிழ் வளர்க்கும் ஆண்டாள் இவர்

தஞ்சையைப் பொறுத்தவரை குந்தவை நாச்சி இவர்
சரசுவதி மகால் இருக்கும் தஞ்சைக்கு வந்த சரசுவதி இவர்.
'மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டும் அம்மா' என்ற
கவிமணியின் பாட்டு வரிக்கு நல்ல
எடுத்துக்காட்டாய் இருப்பவர் இவர்.
அம்மா, நீங்கள் மங்கையாய்ப் பிறந்தது
இந்த மங்கையர்கள் செய்த மாதவம் தான் என்பேன் நான்.
உங்களால் இந்த மங்கையர் குலத்துக்கே
மதிப்பு உயர்ந்து விட்டது அம்மா.
கணவனிடத்தில் மனைவியின் மதிப்புகூட எந்தக்
கட்டணமும் இல்லாமல் கஷ்டமும் இல்லாமல்
மளமளவென்று உயர்ந்து விட்டது அம்மா.
மனைவியைக் கணவன் மாடுபோல் நடத்திய காலம்
இன்று உங்களால் மலையேறி விட்டது அம்மா.
நீங்கள் அரியணையில் அமர்ந்ததால்
அடுப்பு ஊதிக்கொண்டு இருந்த பெண்களுக்கு
அச்சம் என்பது அடியோடு போய் விட்டது அம்மா
மங்கையரெல்லாம் இன்று உங்களால்
மாண்புமிகு மங்கையர் என மாறி விட்டார்கள் அம்மா.
ஆதலால் எங்கள் கவிமணி பாடிய,
'மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டும் அம்மா'
என்பது உங்களால் நிஜமாகி விட்டது அம்மா.
கவிமணியின் வாக்கை நிஜமாக்கிய உங்களை
இந்தக் கவியரங்கில் கைகூப்பி வணங்குகிறேன்.
நிலையாய் நீங்கள் வாழிய என்று என் நெஞ்சார வாழ்த்துகிறேன்.
மனைவி ஒழுங்காகச் சமைத்துப் போடும்பொழுதே
உப்பு குறையுது; காரம் குறையுது என
தப்பு, தவறு சொல்லி தலைமுடியைப் பிடித்து இழுத்து
சண்டை பிடித்த ஆடவர்கள்
இப்பொழுதெல்லம் அப்படியே ஒருசமயம்
நிஜமாகக் குறைந்தாலும் கண்டுகொள்ளாமல்
சண்டைகள் போடாமல் சமாதானமாய்ப்
போய் விடுகிறார்கள் என்றால்
இந்தச் சமாதான சகவாழ்வை
உங்கள் ஆட்சி அல்லவா சாதித்தது!
பொறுமையை ஆண்களுக்குப் போதித்தது.
பெண்ணைக் கட்டிக் கொடுக்கும் பெற்றோர்
மணமக்களுக்குப் பரிசாய் கட்டில் கொடுப்பார்கள்
நீங்களோ பெண் சிசுக்களைக் கட்டிக் காக்க
தொட்டில் கொடுத்தீர்கள்
தூக்கி எறியப்படும் பெண் சிசுக்களைக்
காப்பாற்றி வாழ்வு கொடுத்தீர்கள்.
கவிமணியின் வார்த்தைக்கு உயிர் கொடுத்தீர்கள்,
'பின்னி முடிச்சிடம்மா;
பிச்சிப்பூ சூட்டிடம்மா'
இந்தப் புவியில்
பெற்றதாய் பின்னி முடிக்காத பிஞ்சுக் குழந்தைகளுக்கு எல்லாம்
உற்ற தாயாகி பின்னி முடிக்க வைத்தீர்கள்.
பிச்சிப் பூ சூட வைத்தீர்கள்.
கவிமணி, "உள்ளத்து உள்ளது கவிதை உண்மை
உருவெடுப்பது கவிதை" என்றார்.
நீங்களே ஒரு கவிதையாய் இருக்கிறீர்கள் காரணம்.
நீங்கள் மக்களுக்கு உண்மையாய் இருக்கிறீர்கள்.
ஆதலால்,
அவர்கள் உள்ளத்திலும் இருக்கிறீர்கள்.
மக்கள் உள்ளத்தில் இருக்கும் கவிதை
கவிமணி காண விரும்பிய கவிதை
நீங்கள் யுக்தியின் வடிவம்

சக்தியின் மறு வடிவம்
தமிழர்கள் கொண்ட தமிழ்ப் பற்றின் வடிவம்
சாதி மதங்களாம் சங்கிலிகளை அறுத்தெரிந்த
நீதியின் வடிவம். நியாயத்தின் வடிவம்
உங்கள் ஆட்சியில்.
பெண்ணுக்காகப் பாடிய கவிமணி பற்றி
கவிபாடுவதில் நான் உண்மையிலேயே
பெருமைப்படுகிறேன்.

## கவியரங்கத் தலைவருக்கு வணக்கம்

தஞ்சை மண்ணின் தரையைப் பார்த்தாலோ
எங்கும் பச்சை நிறம்.
இந்தக் கவியரங்கின் தலைவர்
தலையைப் பார்த்தாலோ, மீசையைப் பார்த்தாலோ
ஒரே பஞ்சு நிறம்.
என் அண்ணணே; கவிதை மன்னனே!
உன் தலையில் கொஞ்சம் ரோஜா நிறம் தடவினால்,
உன் பேரப் பிள்ளைகளுக்கு
என்றுமே பஞ்சு மிட்டாய்க்குப் பஞ்சம் வராது.
உன் நரை பித்தநரை அல்ல. சுத்த நரை.
தலை நரைத்த உன்னிடத்தில் தமிழ் மட்டும்
எப்படித் தஞ்சைப் பயிரைப்போல்
என்றும் பசுமையாய் இருக்கிறது?
புலமையால் நீ முதியவன்
உன்னை இந்த இளையவன் பாசமுடன் வணங்குகிறேன்.

## மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு வணக்கம்

கவியரங்கைத் தொடங்கி வைத்த
அமைச்சர் கு.ப. கிருஷ்ணன் அவர்கள்
எட்டாவது குழந்தையாய் வட மதுரையில் பிறந்த
கிருஷ்ணன் பெயரேர்டு
எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக் கவி அரங்கைத்
தொட்டுத் தொடங்கி வைத்த எங்கள் அமைச்சர்
கிருஷ்ணனின் உறவெல்லாம் நெற்பயிரோடு.
சம்பா விவசாயம் தொடங்கியதா என
அன்பாய் விசாரிக்கும் இவர், இருபதாம் நூற்றாண்டுப்
பாவலர்கள் செய்த பா விவசாயம் பற்றி
பாட்டரங்கைத் தொடங்கி வைத்துள்ளார்.
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாய் எனப்பாடி
தூங்கும் கடவுளையே தட்டி எழுப்ப
வேண்டிய நிலையில் இருக்கும் திருவரங்கத்தார்
வேண்டும் முன் எழுந்து விவசாயம் பார்க்கும்
வேளாண்மைத் துறைக்கு அமைச்சராய் விளங்குகிறார்.
மாடுகள் இல்லாமல் விவசாயம் ஏது?
அந்த மாடுகள் கிருஷ்ணனிடம் அல்லவா மயங்கி நிற்கும்?
ஆதலால் இவர் அப்பொழுதே
மாட்டுக்கார வேலன் கூட்டத்தில் சேர்ந்து விட்டார்.
ஆதலால் இந்தப் பாட்டுக்கார வேலன் இங்கே பாசமுடன்
வணங்குகிறேன்.
தென்னவன் தமிழ் வளர்த்த முன்னவன்
மீன் கொடி பிடித்து நடந்த மன்னவன்
அன்னவன் முன்னிலையில் அன்று
ஆயிரமாயிரம் புலவர்கள் கவியரங்கம் ஏறினார்
தென்னவனாம் அமைச்சர் முன்னிலையில் இன்று இந்தக்
கவியரங்கம்.
என்றும் தமிழுக்குக் காவலராய் இருக்கும் நாவலரை
மதியின் இளவலாய் மண்ணில் தோன்றிய சட்ட
அமைச்சரை
தமிழ்ப் பயிர் வளர எருவாய் இருந்த வருவாய்
அமைச்சரை
பசிப்பிணி மருத்துவன் பண்ணனின் வழியில்
பசிப்பிணி போக்கும் உணவு அமைச்சரை
மற்றும் உள்ள அமைச்சர்களை,

மன்றத்தவரை மனமார வணங்குகிறேன்.
இலையில் எடுத்துப் போடுவதற்கு
எப்பொழுதும் சோறுடைத்தது சோழ வளநாடு
எப்பொழுதும் சோறு படைத்தது சோழ வளநாடு
என்பார்கள்.
தஞ்சை இராசராசனும், இராசேந்திர சோழனும்
குந்தவை நாச்சியாரோடு அமர்ந்திருந்து
மந்திர ஆலோசனை பல புரிந்து
மண்ணெலாம் வென்று வாகை அணிந்து
விண்ணெலாம் கொடி பறக்க மனமகிழ்ந்து
பெரிய கோயிலையே பிரியமுடன்
உரிய கோயிலாய் இந்த மண்ணுக்குத் தந்துவந்து வலம் வந்து
பேரரசை உருவாக்கிய நகரம்
ஐந்து கிளைகளாய்க் காவிரி பிரிந்து
ஏழு ஸ்வரங்களுக்கும் ஏற்ப இசைந்த
இந்தத் தஞ்சையில்தான்.
ஐயாற்றில் இசை மீட்ட இந்தத் தஞ்சையில்தான்.
கருநாடக சங்கீதம், வேங்கட மகியால் விளக்கம் பெற்றது.
சங்கீதம், நடனம், சாஸ்திரம், நாதஸ்வரம், ஓவியம்
இங்கே வளர்ந்தது போல் வேறு எங்கும்
வளர்ந்தது இல்லை.
தஞ்சைக் கலைகளின் தாயகம் ஆதலால் இந்தத்
தஞ்சையை நெஞ்சை நிமிர்த்தி நான் வணங்குகிறேன்.
கவிமணி, ஒரு விந்தையான கவிஞர்
காந்தி யுகத்தில்
உமர்கய்யாமை மொழி பெயர்த்து வென்றவர்.
கள்ளுக்கடைகளுக்கு முன்னால்
மறியல் செய்து கொண்டிருந்த கால கட்டத்தில்
மதுக்கோப்பைக் கவிதைகளுக்கு மறு பிறப்புக்
கொடுத்தவர்.
ஆசிய ஜோதி என்று நேருவுக்கு
அகிலம் புகழ்மாலை அணிவிப்பதற்கு முன்னால்
ஆசியஜோதி புத்தன் என்று அழகான நூல் படைத்தவர்
வெள்ளையனே வெளியேறு என்று இந்த நாடு
வெள்ளையர்களை விரட்டிக் கொண்டிருந்த நேரத்தில் அந்த
வெள்ளையர்களின் கவிதைகளையெல்லாம்
நல்ல தமிழிலே எழுதி நம்மை வரவேற்க வைத்தவர்
வெள்ளைக்காரன் மேலே வெறுப்பு இருந்த காலத்தில்
'தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு, அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக் குட்டி' என்று
பாட்டு பாடியவர், இந்தக் கவிஞர்.
வயதால் பாரதிக்கும் மூத்தவர். இந்த நாட்டைப்
பாரதிக்குப் பின்னாலும் இருந்து பார்த்தவர்.
எவரையுமே வைது எழுதாத இவருக்கு
வையாபுரிப் பிள்ளைதான் முன்னுரை எழுதியவர்.
இந்தக்கவிமணி பெண்களைப் பற்றி மட்டுமே
பெருமையாகப் பாடியதற்குக் காரணம்
இந்திய நாட்டின் கடைக்கோடியில் இருக்கும்
கன்னியாகுமரிக்கு அருகில் பிறந்தது
ஒரு காரணமாய் இருக்கலாம்.
கல்வி நிலையங்களில் கன்னியருக்குத்
தமிழ் கற்றுக் கொடுத்தது
மற்றொரு காரணமாகவும் ஆகலாம்.
காரணங்கள் ஆயிரம் இருந்தாலும் இந்தக் கவிமணியின் கவிதைகள்
ஆரணங்குகளுக்கு ஆரத்தித் தட்டுக்களாய் ஆகிவிட்டன.
'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று பாடிய பாரதிக்குப் பின்
"ஓடும் உதிரத்தில் வழிந்தொழுகும்
கண்ணீரில் தேடிப் பார்த்தாலும்
சாதி தெரிவதுண்டோ அப்பா"
என அப்பவே பாடியவர்.

இவர் பெண்களைப் பற்றி எழுதியதைக் கூட வாசிப்பதற்கு வசீகரமாய் இருக்கிறது.
"மானைப் பழித்த விழியுடையாள்;
ஒரு மாமயில் போலும் நடையுடையாள்
தேனைப் பழித்த மொழியுடையாள்; பெண்ணின்
தெய்வம் எனத்தகும் சீருடையாள்'.
பெண்மணி பற்றிய இந்தக் கவிமணியின் சொல்மணிகள்
நம் கண்மணியைக் கூட கவர்ந்து இழுக்குமே;
தேசிக விநாயகம் என்பதால் தானோ என்னவோ
இவர் தேசிய விநாயகம்;
விநாயகம் என்பதால் தானோ என்னவோ
இவரது பாடல் வரிகளில் கூட வினா எழுகிறது.
"சூரியன் வருவது யாராலே?
சந்திரன் வருவது யாராலே?"
என்றெல்லாம் பாடலில்
வினாக்கள் தொடுத்து, விளையாடும் குழந்தைகள்
குழந்தைச் செல்வங்களையும் சிந்திக்கத் தூண்டினார்.
அதனால் நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளையும்
'தேசிய விநாயகத்தின் கவிப் பெருமை,
தினமும் கேட்பது எந்தன் செவிப் பெருமை'
என்று புகழ்ந்து கொண்டாடினார்.
அத்தகு கவிமணியின் புகழ் இத்தரையில் என்றும் இருக்கும்.

**(கடந்த ஜனவரித் திங்களில் தஞ்சைத் தரணியில் சீருடன் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில், "இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்கள்" என்னும் தலைப்பில் கவிமணி தேசிக விநாயகம் அவர்களைப் பற்றி, கவிஞர் குருவிக்கரம்பை சண்முகம் அவர்கள் பாடிய கவிதை).**

# ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டக் கிட்டங்கிகள்

**தமிழகச் சமூகநல மற்றும் சத்துணவுத் துறையின் கீழ் நடத்தப்பட்டு வருகின்ற (ICDS) Integrated Child Development Scheme ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்திற்குத் தேவையான சத்துணவு மற்றும் மருந்துகள் ஆகியவற்றைத் தக்க முறையில் வைத்துக் கொள்வதற்காக, திட்டக் கிட்டங்கிகள் கட்டுவதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஒரு கிட்டங்கிக்கு இரண்டரை இலட்சம் ரூபாய் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்ட 20 இடங்களில் கிட்டங்கிகள் கட்டுவதற்கு 50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.**

**ஒன்றியத் தலைமை இடங்களில் கட்டப்படவுள்ள இந்த ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டக் கிட்டங்கிகள் கீழ்க்கண்ட மாவட்டங்களில் கட்டப்படும்:**

**வட ஆர்க்காடு அம்பேத்கர் 1, புதுக்கோட்டை 2, கோயம்புத்தூர் 3, மதுரை 2, தர்மபுரி 3, தஞ்சாவூர் 1, சேலம் 1, கன்னியாகுமரி 1, இராமநாதபுரம் 1 மற்றும் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். 5**

**இந்தக் கிட்டங்கிகள் கட்டும் பணி விரைவில் முடிக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**



# தங்கும் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்க்கு சன்னரக மற்றும் மிகச் சன்ன ரக அரிசி வழங்கப்படும்!

இந்த ஆண்டு 1995, ஆகஸ்ட் மாதம் சென்னையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில், கலந்துகொண்டு உரையாற்றியபோது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், ஆதிதிராவிடர்களுக்கான மாணவ மாணவியர் விடுதிகளிலும், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான மாணவ மாணவியருக்கான விடுதிகளிலும், தங்கிப் பயிலும் மாணவ மாணவியருக்குத் தற்போது அளிக்கப்பட்டு வரும் சாதாரண அரிசிக்குப் பதிலாக, சன்னரக மற்றும் மிகச் சன்ன ரக அரிசி வழங்கப்படும் என்ற அறிவிப்பு ஒன்றினை வெளியிட்டிருந்தார்.

தற்போது மாவட்டங்களில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கான தங்கும் விடுதிகளிலும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் தங்கும் விடுதிகளிலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் பொது விநியோகத் திட்டத்தின்கீழ், வழங்கப்படுகின்ற விலையில், கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி விடுதிகளில் பயில்கின்ற மாணவ மாணவியர் ஒவ்வொருவருக்கும் 18 கிலோ அரிசியும், பள்ளிகளில் உள்ள தங்கும் விடுதிகளில் தங்கிப் பயிலும் ஒவ்வொருவருக்கும் 12 கிலோ அரிசியும் வழங்கப்படுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள அனைத்துத் தங்கும் விடுதிகளிலும் உள்ள 1,792 தங்கும் விடுதிகளில் தங்கிக் கல்வி பயில்கின்ற 1,19,178 மாணவ மாணவியர்க்கு, மொத்தம் ஒரு கல்வி ஆண்டில், அதாவது 10 மாதங்களுக்கு 1,82,766 குவிண்டால் சதாரண ரக அரிசி வழங்கபபடுகிறது.

தற்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், இத்தகைய தங்கும் விடுதிகளில் தங்கிப் பயில்கின்ற மாணவ மாணவியருக்கு 5.17 இலட்சம் ரூபாய் கூடுதல் மானிய செலவில் சன்னரக மற்றும் மிகச் சன்ன ரக அரிசி வழங்கப்படும் என்று ஆணை பிறப்பித்துள்ளார். இந்த ஆணை உடனடியாக அமலுக்கு வருகின்றது.

# காளை மாடு இன வளர்ச்சிக்கான புதிய திட்டம்

கால்நடை துறை வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகின்ற தமிழக அரசின் கால்நடைத் துறையானது நடப்பு ஆண்டான 1995-96-இல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் அறிவுரையின்படி, ந... தொழில்நுட்பச் செய்... களைக்கால்நடை வளர்... பணிகளுக்குப் பயன்படுத்து... காகவும், மேலை நாடுகளில் உள்ள காளை மாடுகளுக்கு இணையாக நமது மாநிலத்தில் உள்ள காளை மாடுகளும் அதிக வளர்ச்சியோடும், ஆற்றலோடும் இருக்க வேண்டியதன் அவசியம் கருதியும் காளை மாடு இன வளர்ச்சிக்காகத் தனித் திட்டம் ஒன்றினைத் தயாரித்து அரசின் ஒப்புதலைக் கோரி இருந்தது.

தமிழகக் கால்நடைத் துறையின் இந்தப் புதிய திட்டத்தைப் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டில் காளை மாடு இன வளர்ச்சித் திட்டம், செயல்படுத்துவதற்காக 105 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார். இத்திட்டம் விரைந்து செயல்படுத்தப்பட வேண்டுமென்றும் உத்தரவிட்டுள்ளார்.

# ஆட்சி மொழித் தமிழ் வளர்க்கும் அரும்பணியை இயக்கமாய் மாற்றி வெற்றி கொள்வோம்!

திரு கே. மலைச்சாமி, இ.ஆ.ப.,

**மாநிலத் தேர்தல் ஆணையாளர் திரு கே. மலைச்சாமி, இ.ஆ.ப., அவர்கள் கடந்த ஜனவரித் திங்களில் தஞ்சை மாநகரில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் "ஆட்சிமொழி" என்னும் தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் பங்கேற்று ஆற்றிய உரை**

"உலகப் பாதைகளெல்லாம் ரோமாபுரியை நோக்கிச் சென்றன" என்று ஒருவன் அன்று ஒரு நாள் சொன்னான். இன்று அவனைக் கூப்பிட்டுக் கேட்டால், உலகப் பாதைகள் பலவும் தஞ்சைத் தரணியை நோக்கிப் போய்க் கொண்டு இருக்கின்றன. அதுமட்டுமல்ல, எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டில், தமிழ்ப் பரணி பாடிக்கொண்டிருக்கிறது என்று சொல்லிக் காட்டுவான் அத்தகைய சிறப்போடு இன்றைக்கு எட்டாம் உலகத் தமிழ் மாநாடு எழிலாக, ஏற்றத்தோடு, எட்டுத் திக்கும் பரவி, விரவி இருக்கின்ற ஒரு அரிய செயலை நாம் கண்டு கொண்டிருக்கிறோம்.

**பயனுள்ள மாநகராய் மாறியது தஞ்சை**

எங்கு நோக்கினும் வண்ணத் தோரணங்கள், வளைவு வாயில்கள், வருக வருக என்ற வரவேற்புகள், துலங்கும் தோரண வாயில்கள், தொங்கும் வின்ச் ரெயில், மிதக்கும் பாலம், மிளிரும் கோபுரங்கள், சிலைகள், சின்னங்கள், மண்டபங்கள், பளபளக்கும் பாதைகள், பலப் பல கட்டடங்கள், புதுப்புதுப் புராணச் சின்னங்கள், இப்படியாக, பலப்பல மேம்பாட்டுப் பணிகள் நடந்து தஞ்சை மாநகரத்தை ஒரு ஆற்றல் மிக்க நகரமாக, அருமை நகரமாக இங்கே ஆக்கித் தந்திருக்கிறார்கள்.

அருமைக்கும் பெருமைக்கும் உரிய, பயனுள்ள ஒரு மாநகரமாக இந்தத் தஞ்சை இங்கே மாறி இருக்கிறது. இப்படிப்பட்ட பெரும் பணியை யெல்லாம் செய்து, எத்தனை உலகத் தமிழ் மாநாடுகள் நடநதாலும், இங்கே நடக்கின்ற இந்த மாநாடு மற்ற மாநாடுகளைவிட விஞ்சியும், மிஞ்சியும் இருக்கிறது என்று சொல்லத்தக்க வகையில் ஒரு அபரிமிதமான ஆற்றல்மிக்க மாநாட்டைப் படைத்துக் காட்டிய முதலமைச்சர் அவர்களையும், அவர்களைச் சார்ந்த அமைச்சர் பெருமக்களையும், பாராட்டுகிறேன்.

**கலாச்சாரக் கண்ணாடி! பண்பாட்டுப் பலகனி!**

ஆட்சி மொழியைப் பற்றிப் பேசுவதற்கு முன் மொழி என்றால் என்ன என்று நீங்கள் தெரிந்தாக வேண்டும். மனிதன் கண்டுபிடித்த கண்டுபிடிப்புகளிலேயே மகத்தானது மொழி. தனது உணர்வை, உள்ளத்தை, கருத்தை, வெளிப்பாடாகச் செய்கின்ற மாபெரும் கருவி தான் மொழி. எழுத்தானாலும், பேச்சானாலும் கலாச்சாரத்தின் கண்ணாடியாக, பல கலைகளுக்கும் பலகணியாக இருக்கின்ற, பண்பாட்டுக்குப் பல கணியாக இருக்கின்ற மொழி தான் மிகச் சிறந்த மொழி. அப்படிப்பட்ட ஒரு இலக்கணத்தை வரையறை வைத்துக்

கொண்டு, நமது தமிழ் மொழியைப் பார்த்தால் அது அருமையான மொழி, தனிமை யான மொழி, தொன்மையான மொழி, தனித்தன்மை பெற்ற மொழி, வளமும், நலமும், நயமும் பெற்ற மொழி. அது இன்பமயமானது இனிமை யானது என்றெல்லாம் நாம் சொல்லுகிறோம்.

### ஏனைய மொழிக்கெல்லாம் சவால் விடுகிறான் பாரதி

பாரதிதாசனை, பாவேந்தனை அவனுடைய பாணியில் சொல்லுவது என்றால்,

கனியிடையேறிய சுளையும்,
முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும், காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும் நனிபசு
பொழியும் பாலும், தென்னை
நல்கிய குளிரிள நீரும் இனிய
என்பேன் எனினும், தமிழை,
என் உயிர் என்பேன்.
என்றான், புரட்சிக் கவி.

அதோடு நின்றானா?

"மங்கை ஒருத்தி தரும் இன்பம்
என்றன்
மாத்தமிழுக்கு ஈடில்லை கண்டீர்"

என்றான்.

பாரதிதாசன் இப்படிச் சொன்னார் என்றால், அவனது ஆசான் பாரதி. பாவில் வல்லவன், பன்மொழிப் புலவன், "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்று ஏனைய மொழிகளுக்கெல்லாம் சவால் விட்டுப் பார்க்கிறான். இப்படி இனிமையான மொழி

---

★ **உழைப்பதில் மட்டுந்தான் உண்மையான பெருமை கிடைக்கிறது.**

**—கால்ரிட்ஜ்**

---

யாக, இன்பமயமான மொழியாக, தமிழ் இருந்தது என்பதைவிட, அதற்குக் கொடுக்கப்பட்டிருக் கின்ற கவசத்தைப் பாருங்கள் அதற்கு அணிவிக்கப்பட்ட ஆடையைப் பாருங்கள். வேறு எந்த மொழிக்கும் இல்லாத அளவுக்கு அருந்தமிழ், இன்தமிழ், ஒண்தமிழ், கலைத் தமிழ், கவின் தமிழ், தண்டமிழ், தென் தமிழ், தென்னவன் தமிழ், நற்றமிழ், நறுந்தமிழ், முத்தமிழ், மூத்த தமிழ், மூவர் தமிழ் என்றெல்லாம் வரிசை வரிசையாக அடுக்கு கின்ற அளவுக்கு ஏற்றம் பெற்றிருக்கிறது. தமிழ் மொழி மட்டுமல்ல, தமிழ் மொழி பேசும் தமிழர் அறிவால், ஆற்றலால், பண்பாட்டால், பழக்க வழக்கத்தால், நாகரிகத் தால் அத்தனையிலும் சிறந்து உயர்ந்து இருக்கிறார்கள். அக்காலத்திலே தமிழர்கள் கடல்போர் புரிந்து இருக் கிறார்கள். கல்லணையைக் கட்டி இருக்கிறார்கள். இப்படிக் கடல் பயணம் செய்வது, கப்பலைக் கட்டுவது, கல்லணையைக் கட்டுவது என்றால் அவர்களுக்கு எவ்வளவு நுணுக்க நுண்ணறிவு இருந்திருக்க வேண்டும்!

கடலியல், காற்றியல், வானியல், கோளியியல், பொறியியல் இப்படி இத்தனை இயல்களும் தெரிந்தவனாக இருந்து இருந்தால்தானே, அவன் அவ்வளவு தூரத்திற்கும் உயர்ந்து இருக்க முடியும்? மற்ற இனத்த வரெல்லாம் காட்டிலே கந்த மூலாதிகளைச் சாப்பிட்டுக் கொண்டு அலைந்து திரிந்து அந்தக் காலத்தில், காட்டு மிராண்டிகளாக மற்றவர்கள் வாழ்ந்திருந்த காலத்தில், தமிழன் ஏடும் எழுத்தாணியையும் எடுத்து, இறவாத இலக்கியங் களைப் படைத்துக் கொண்டி ருக்கிற அளவுக்கு நாகரிகச் சிறப்பைப் பெற்றிருக்கிறான். அப்படிப்பட்ட நாகரிகத்தால், பண்பாட்டால், பழக்க வழக்கத் தால், மொழி வளத்தால், உயர்ந் திருந்த காரணத்தால்தான், இன்றிலிருந்து ஏறத்தாழ ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகத் தமிழ் வாழ்ந்து, வளர்ந்தது.

ஹரப்பா, மொகஞ்சோதாரா நாட்டினுடைய கால எல்லையை, காலத்தின் அறுதியை ஐந்தாயிரம் ஆண்டுகள் என்று கணித்து இருக்கிறார்கள். கணக்கிட்டு இருக்கிறார்கள். ஐந்தாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் வளர்ந்தது வாழ்ந்தது உயர்ந்தது. ஆகவே, ஐந்தாயிரம் ஆண்டுகளாக ஆட்சி மொழியாக அது இருந்தது. கிறிஸ்து பிறப்பதற்கு முன்பா கவும், கிறிஸ்து பிறப்பதற்கு பின்பாகவும் ஆட்சிமொழியாக இருந்தது. உங்களுக்குத் தெரியும். சங்க காலமாயினும் சங்கம் மருவிய காலமாயினும், பாண்டியர் காலமாயினும், பல்லவர் காலமாயினும், சோழர்கள் காலமாயினும், நாயக்கர்கள் காலமாயினும், முகமதியர்கள் காலமாயினும் இந்த அனைத்துக் காலங் களிலும், ஐரோப்பியர்கள் காலம்

ஒன்றை மட்டும் தவிர்த்து, ஏனைய அனைத்துக் காலங்க்ளிலும் தமிழ் ஆட்சி மொழியாகச் சுடர்விட்டுப் பிரகாசித்தது. ஆனால், ஆங்கிலேயர் வருகை, அன்னிய ஏகாதிபத்தியம் நமது தமிழ்மொழியைக் கட்டுப்படுத்தியது. தடைப்படுத்தியது. அதை அடிமைப் படுத்தியது. ஆகவேதான், அந்தத் தாய்மொழி, தனிமொழியாக நின்ற மொழி, அநாதை மொழியாக நின்றது. வீட்டு விளக்காக, குடும்பத் திலகமாக நின்ற மொழி, பணிப் பெண்ணாக வீட்டிலே இருக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஆங்கிலேயர் ஆட்சியில்தான் வந்துவிட்டது. ஆக, ஆங்கிலேயர்கள் ஏனைய எல்லா மொழிகளையும் ஒதுக்கிவிட்டு, முழுக்க முழுக்க ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக ஆக்கினார்கள்.

**மக்களை மட்டுமன்றி, மொழியையும் அடிமைப் படுத்தினான் ஆங்கிலேயன்!**

ஏனையவரெல்லாம், அது முகமதியராயினும் சரி, நாயக்கர்களாயினும் சரி, என்ன செய்தார்கள்? அவர்கள் தமிழை ஒதுக்கவில்லை, புறக்கணிக்கவில்லை, ஓரம்கட்டவில்லை. அதேநேரத்தில், அவரவர்கள் மொழியைச் சேர்த்துக் கொண்டார்கள். முகமதியர் காலத்திலே உருதுச் சொற்கள் சில தமிழ் ஆட்சியில் புகுந்தன. இன்றைக்கு நீங்களெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறீர்களே, தாசில்தார், சிரஸ்தார், டபேதார், ஹுசூர், கஜானா இவையெல்லாம் நம் தமிழ் அல்ல. முகமதியர் காலத்திலே வந்த உருதுச் சொற்கள், நம்மை ஆண்டன. அதேநேரத்தில் தமிழ் ஆட்சி மொழிக்கு அது ஆபத்தை விளைவிக்கவில்லை. அடியிலே நின்று சில இடங்களைப் பிடித்தது. அவ்வளவு தான்.

ஆனால், ஆங்கிலேயர் காலத்தில்தான் அனைத்தும் போய்விட்டது.

ஆங்கில ஏகாதிபத்தியம் அரசாண்ட 200 ஆண்டுகளுக்கு, தமிழ் மொழி அவர்களிடத்தில் அடிமைப்பட்டு விட்டது. நாம் அடிமைப்பட்ட பிறகு நமது மொழிபோய் விட்டது. ஆங்கிலம் சன்னஞ்சன்னமாக ஆட்சி மொழியாக ஆகிவிட்டது. ஆங்கிலச் சொற்கள் எப்படியெல்லாம் நமக்கு இயற்கையாகவே வந்துவிட்டது என்று இங்கே சொன்னார்களே, அந்த இழப்புக்குக் காரணம், தமிழ் இழப்புக்குக் காரணம் ஆங்கில ஆட்சி.

**ஆட்சிமொழி ஆனபின்னும் அடைந்ததா வளர்ச்சி?**

ஆங்கில ஆட்சியில் ஏற்பட்டன இந்தச் சங்கடங்கள் என்பது சரிதான். ஆனால், அதை அடுத்து நாடு விடுதலை பெற்றதே அதன்பிறகு நமது தமிழ் ஆட்சிமொழி ஆயிற்றா என்றால், அதற்கும் காலம் 1950-இல் தான் வந்தது. இந்திய அரசியல் சட்டம் என்ற ஒரு சட்டம் வந்த பிறகு, ஆட்சி மொழியைப் பற்றிப் பேசுகின்ற ஒரு சூழ்நிலை வந்தபிறகு, இந்திதான் ஆட்சிமொழி இந்தியாவிற்கு என்றுசொன்ன பிறகு, அதே நேரத்தில் 1950-லிருந்து 15 ஆண்டுகளுக்குள் அதாவது அரசியல் சட்டம் ஏற்பட்ட 15 ஆண்டுகளுக்குள் ஒவ்வொரு மாநிலமும் தனக்கு ஒரு மொழி ஆட்சிமொழியாக வேண்டுமென்றால், அதற்கு சட்டம் இயற்றி அதை நிர்மாணித்துக் கொள்ளவேண்டும் தவறினால், அந்த இடத்தையும் ஆங்கிலமே எடுத்துக் கொள்ளும் என்று ஒரு ஷரத்து வந்தால் தான், இந்திய அரசியல் சட்டம் குறிப்பிட்ட காரணத்தால்தான், தமிழகத்தில் 1956-இல் அந்தச் சட்டத்தை நிறைவேற்றி 1957-இல் இருந்து இன்று வரை தமிழ் ஆட்சிமொழியாக இருக்கிறது.

1957-லிருந்து இன்றைக்கு 1994 முடிந்து 1995 வரை 37 ஆண்டுகளில் தமிழ் ஆட்சிமொழியாக அரசோச்சிக் கொண்டிருக்கிறது. இப்போது தான் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆட்சிமொழியான பிறகு ஆட்சிமொழி தமிழ் வளர்ந்து இருக்கிறதா? என்று நினைத்துப் பார்க்கின்றபோது, சில சமயங்களில் மகிழ்ச்சியாகவும், சில சமயங்களில் துக்கமாகவும் இருக்கிறது. 37 ஆண்டுகள் ஆட்சிமொழியாக இருக்கின்ற இந்தத் தமிழ் மொழி என்ன சாதித்தது? என்ன சந்தித்தது? எங்கே சாதிக்கத் தவறியது? என்று நாம் ஒரு

---

★ **வெற்றிக்குக் காரணம் திறமையன்று. தளராத ஊக்கமேயாகும்.**

**—சார்லஜ் பக்ஸ்டன்**

---

★ **அறிவு பணக்காரர்களின் ஆபரணம். ஏழைகளின் செல்வம்.**

**—தாமஸ் கார்லைஸ்**

ஆய்வு நடத்திப் பார்த்தால் நான் சொன்னேனே, Mixed feeling என்று சொல்லக்கூடிய ஒரு கலந்த மனப்பான்மைதான் நமக்கு ஏற்பட முடியும்.

**தடைக்கற்கள் எதுவாயினும் தவிடுபொடி ஆக்கிடுவோம்!**

60 சதவிகிதம் ஆட்சிமொழி வெற்றி பெற்றுவிட்டது என்று கணக்கிட்டுச் சொல்லுகிறார்கள் நமது நண்பர்கள். வரவேற்கத் தக்கதுதான். ஏனைய மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது, தமிழகத்தில் தமிழ் மொழி ஆட்சிமொழியாகச் செயல்படுவததைப்போல் எந்த மாநிலத்திலும் செயல்படுத்தப் படவில்லை. கணக்குக் கொடுத்து இருக்கிறார்கள். வரவேற்கிறோம். ஆனால் 37 ஆண்டுகளில் நடந்து வந்த பாதை போதுமா, போதாதா என்றால் போதாது, போதாது, போதாது. இந்த ஆமை வேகத்தை அடித்து நொறுக்க வேண்டும். அதற்கு நீங்கள் சில தீவிர நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும். அவ்வாறு செயல் படுவதற்கு த் தடைக் கற்கள் எவை என்றாலும், அவற்றைச் சிதறடித்து, தவிடுபொடியாக ஆக்கவேண்டும் என்ற ஒரு சூழ்நிலை வராத வரை நாம் வெற்றி காணமுடியாது. இந்த 60 சதவிகிதமாகவும், 65 சதவிகித மாகவும், 70 ஆகவும் இன்னும் எத்தனை ஆண்டுகள் காத்திருப்பது?

**கெட்டழிக்கும் அடிமைப்புத்தியை விட்டொழிப்போம்-வீரங்கொள்வோம்!**

நமது ஆட்சிமொழியைச் செயல்படுத்துகின்ற அரசாங்க அலுவலர்கள், பணியாளர்கள், நிறுவனங்கள், அமைப்புகள் இவர்களைக் கேட்டால், அவர்கள் என்ன சொல்லுகிறார்கள்? ஆங்கிலத்தைப் போல், அருமையான ஆற்றல் நமக்குத் தமிழில் இல்லை. தமிழ் நமக்குப் பழக்கமில்லை. நிர்வாக மொழிக்கு ஆங்கிலம் நல்ல அருகதை பெற்றுவிட்டது எனக்குப் பழக்கதோஷம் ஆக, இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், அது ஆற்றல் இல்லாத மொழி, பழக்கம் இல்லாத மொழி, அதிலே சிரமம் இருக்கிறது, அதைச் சொல்லுகின்றபோது, முழு அர்த்தம் தொனிக்கவில்லை என்றெல்லாம் சொல்லிக் காட்டுகிறார்கள். நான் மனதைத் திறந்து சொல்வதற்கு மன்னிக்க வேண்டும். ஆங்கிலேயன் நம்மை விட்டுப் போய்விட்டாலும், அவன் விட்டுச் சென்ற அடிமைப் புத்தி நம்மை விட்டுப் போகவில்லை என்பதுதான் இதற்கெல்லாம் பெரும் காரணம். இங்கே சுட்டிக்காட்டினார்களே, ஆங்கில மோகம். இக்கரைக்கு அக்கரைப் பச்சை என்ற நிலைமை. இந்த நிலைமை மாறாத வரை நாம் நிச்சயமாக முன்னேற முடியாது. இங்கே இதைச் செயல்படுத்துகின்றவர்களுக்கு இதில் ஒரு தீவிரம் வேண்டும். ஒரு தீவிர ஈடுபாடு வேண்டும். மாறாக, தமிழ் மொழியைக் கற்று அதில் சிறப்பு அடைய வேண்டும் என்ற ஒரு பற்றின்மைதான், நமது தோல்விக்கு மிக மிக முக்கியக் காரண்மாக எனக்குப்படுகிறது.

**புதுப்புதுச் சொல் வேண்டுமோ? பேச்சிலே தேடுக! இலக்கியத்தில் காண்க!**

பலப்பல நிறுவனங்களும், அமைப்புகளும் இருந்தும்கூட இந்த 37 ஆண்டுகளில் நீங்கள் 60 சதவிகிதம்தாம் ஆட்சியிலே தமிழை அரசோச்சினீர்கள், அரியணை ஏற்றினீர்கள் என்றால் இதற்கு என்ன தடை? அவர்கள் சொல்லுகிறார்கள், தடை இருக்கிறது. பல காரணங்கள் இருக்கின்றன. தமிழ் ஆட்சிச் சொற்கள் நமக்கு வேண்டிய அளவுக்கு கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். கிடைக்கவா இல்லை? நீங்கள் ஆட்சிச் சொற்களைத் தேட வேண்டுமானால், பேச்சு மொழியைப் பாருங்கள். இலக்கிய மொழியைப் பாருங்கள். கல்வெட்டுக்களைப் பாருங்கள். புதுப்புதுச் சொற்களை ஆக்குங்கள். இலக்கணத்தைப் பாருங்கள் என்று என்னால் சுட்டிக்காட்ட முடியும்.

பேச்சு மொழி பேசுகிறோம். கிராமங்களிலிருந்தெல்லாம் நிறையபேர் இங்கே வந்திருக்கிறார்கள். கிராமங்களில் சொல்லுவார்கள் ஒரு பெண் பருவத்திற்கு வந்துவிட்டால், அவள் சமைந்து விட்டாள் என்று சொல்லுவார்கள். 'சமைந்து விட்டாள்' இந்த

'சமைந்து' என்ற சொல்லை கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். சர்வசாதாரண சாமான்யனாகிய எனது கிராமத்தான் சொல்கிறான் 'சமைந்தாள்' என்று! இந்த சமைந்தாள் என்கிற வார்த்தையில், சொல்லில் எவ்வளவு ஆழம் இருக்கிறது அருமை இருக்கிறது. ஒரு வியாபார சம்பந்தமாக சின்னக் கடையிலே விலையைக் குறைத்துக் கேட்டால், இது எனக்குக் கட்டுப்படியாகாது என்கிறார்கள். 'கட்டுப்படி' என்னும் அந்தச் சொல்லில் எவ்வளவு பொருளாதார அறிவு இருக்கிறது என்று பாருங்கள். இதைக் கொடுக்க முடியாது என்பதற்குக் கட்டுப்படியாகாது என்கிறார்கள். வியாபாரம் என்றால் கொள்வதும் மிகை கொள்ளாது, கொடுப்பதும் குறைவு படாது இருக்க வேண்டும் அல்லவா? "இந்த விலைக்குக் கொடுக்க எனக்குக் கட்டுப்படியாகாது". இதுதான் பேச்சு மொழி.

இலக்கிய மொழியை எடுத்துக் கொள்ளுங்கள். சங்க இலக்கியங்களைப் பார்க்கலாம் பத்துப்பாட்டு, எட்டுத்தொகையை எடுத்துக் கொள்ளலாம் காப்பியங்களில் சிலப்பதிகாரம், மணிமேகலையை எடுத்துக் கொள்ளலாம். எவ்வளவு அருமையான மிக அருமையான சொற்கள், ஆட்சிச் சொற்கள் அங்கே இருக்கின்றன. மதிமொழி, 'அட்வைஸ்' என்பதற்கு மதிமொழி. எவ்வளவு அழகாகச் சொல்லி இருக்கின்றார்கள். 'கான்வர்சேஷன்' என்பதற்கு சொல் ஆடல். இவையெல்லாம் சங்க இலக்கியமாகிய எட்டுத்தொகை, பத்துப்பாட்டில் இருக்கின்றது. சொல் ஆட்சிக்கு வேண்டுமானால் நீங்கள் பாரதியைக்கூட கேட்டுப் பாருங்கள்

"நீலத் திரைக்கடல் ஓரத்திலே
நின்று
நித்தம் தவம் செய்யும் குமரி
எல்லை
வட மாலவன் குன்றும்
இவற்றிடையே
புகழ் மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு"

அந்த 'மண்டி' என்ற சொல்லைப் பாருங்கள். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணி ஆரம் படைத்த தமிழ்நாடு. 'அள்ளும்' என்ற சொல்லை எடுத்துக்கொள்ளுங்கள். எடுத்துவிட்டு அதற்கு ஒரு மாற்று டூப்ளிகேட் போட முடியுமா? சிந்தித்துப் பாருங்கள் சிந்தித்துப் பாருங்கள் இயலுமா? இயலவே இயலாது. ஆக, சொல்லாட்சி. கல்வெட்டுக்களில் சொல் இருக்கிறது.

## இலக்கணக் கடுமையோ கொடுமையோ இனிய தமிழிலே என்றுமே இல்லை!

அதேபோல, நமது இலக்கணம் கடுமையானது என்கிறார்கள். இல்லவே இல்லை. இலக்கணம் என்ன சொல்லுகிறது? நாம் பேசுகிறதை அப்படியே எழுதுவதுதான் இலக்கணம். அவன் வந்தான் என்றால் அவன் வந்தான். இங்கே ஆங்கிலத்தில்தான், b, u, t, but; p, u, t put; but, put இது ஆங்கிலத்தில் உள்ள சங்கடமே தவிர, நமக்கல்ல. தமிழுக்கல்ல. உச்சரிப்பு கந்தசாமி என்றால், கந்தசாமி, காரியசாமி என்றால், காரியசாமி அதிலே மாற்றம் கிடையாது. ஏனைய மொழிகளில் வேண்டுமானால் உச்சரிப்பிலே பிழை இருக்கலாம். ஆனால், தமிழில் கிடையாது. ஆக, இந்தக் குறைபாடுகள் எப்படி வருகின்றன என்றெல்லாம் நாம் பார்க்கின்றபோது, சொற்களை நாம் கண்டுபிடிக்க வேண்டும். அவை மேலெழுந்தவாரியாக நமக்குக் கிடைக்கவில்லை என்றால் விட்டுவிடக் கூடாது. முத்தை எடுக்க வேண்டுமானால் மூழ்கிப் பார்க்கவேண்டும். வைரத்தை எடுக்க வேண்டுமானால் மண்ணைத் தோண்டிப் பார்க்க வேண்டும். இந்த முயற்சி இல்லாத வரை நமக்குச் சொற்கள் எப்படிக் கிடைக்கும்?

தேவையான புதுசொற்களை நாம் எடுக்கின்றபோது பிற சொற்களிலிருந்து நாம் கடன் வாங்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால், வாங்கலாம். சொற்களை வாங்குங்கள், கருத்துக்களை வாங்குங்கள், எழுத்துக்களை மட்டும் வாங்கி விடாதீர்கள். நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம். ஸ்ரீவில்லிபுத்தூர், ஸ்ரீரங்கம். இந்த 'ஸ்ரீ' எங்கேயிருந்து வந்தது? நமக்கு 247 எழுத்துக்கள் இருக்கின்றன. ஆனால் ஆங்கிலேயன் என்ன செய்தான்? 26 எழுத்துக்களை வைத்துக்கொண்டு அதிலே

---

☆ ஊக்கமுள்ளவனே தினமும் செல்வத்தைச் சேர்க்கிறான்.

—ஹேமன்

---

அனைத்தையும் அடக்கி விட்டான். எதை வேண்டுமானாலும் அவன் எழுத்திலே எழுது வானே தவிர, இந்த ஸ்ரீயையோ, ராஷ்ட்டிரபதியில் உள்ள இந்த 'ஷ்'ஷையோ, ராஜ்பவன் என்பதில் உள்ள இந்த 'ஜ்'ஜையோ அவன் கடன் வாங்கவில்லை. மாறாக, எழுத்தை ஆங்கிலேயன் அப்படியே வைத்துக்கொண்டான். நாம் 247 எழுத்துக்களை வைத்துக் கொண்டு, கடன் வாங்கிக் கொண்டே இருக்கிறோம். ஆக, சொல்லை வாங்கலாம் கருத்தைக் கடன் வாங்கலாம். ஆனால், எழுத்தை மட்டும் கடன் வாங்கவே கூடாது என்ற ஒரு நிலை ஏற்பட வேண்டும்.

**உருவாக்கிக் காட்டுவோம் உன்னத அறிவியல் தமிழ்!**

உலகத் தமிழ் மாநாட்டின் தொடக்க விழா நடந்தபோது நமது மாண்புகெழுமிய முதலமைச்சர் தலைமையில் ஆன்றோரும் சான்றோரும் வலியுறுத்திய ஒரு கருத்துக்கு இங்கே வழிமொழிந்து பேசினார்கள். தமிழ் அறிவியல் மொழியாக ஆகவேண்டும். தமிழ் ஆற்றல்மிக்க மொழியாக ஆகவேண்டும். உலகளாவிய உயர் கருத்துக்களைச் சொல்லுகின்ற மொழியாக வேண்டும் என்று சொன்னார்கள். அது முக்கியமான மிக மிக முக்கியமான, ஒன்றாகும்.

நாமெல்லாம் அன்றைய நாளில் அறிவியலில் உயர்ந்து இருந்தோம் ஆற்றலில் உயர்ந்து இருந்தோம். அன்று இருந்தது உண்மை. இன்று, இல்லை. இன்றைக்கு, கம்ப்யூட்டர் காலம். இந்த கணிப்பொறி காலத்தில் நாம் ஹைதர் அலி சங்கதிகளைப் பேசிக்கொண்டு இருப்பதில் நியாயம் இல்லை. நாம் வளர்ந்து இருந்தது அன்றைக்கு. இன்றைக்கு அறிவியல் துறையில், ஆற்றல் துறையில், தொழில் நுட்பத் துறையில் நாம் பின்னோடிக் கிடக்கிறோம். மொழி என்றால் முழுமைத் தன்மை பெற்றிருக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஜெபர்சன், ''A language cannot be taken something given one for all'' என்று சொல்லுகிறான். ஆக, Everything is language என்று சொல்லி விட முடியாது.

எந்த ஒரு மொழியும் எல்லாமுமேயாக ஆகிவிட முடியாது. நம்மிடத்திலே குறை உண்டு. இன்னும் நிறைவு ஆக வேண்டும் சில குற்றங்கள்கூட உண்டு என்று நாம் சொல்லுவதில் தவறில்லை. ஆகவே, அறிவியல் தமிழை வளர்க்க வேண்டும், ஆற்றல் தமிழை வளர்க்க வேண்டும், தொழில் நுட்பத் தமிழை நிச்சயமாக வளர்க்க வேண்டும். அப்படி வளர்க்கின்ற முயற்சியில் நாம் தீவிரமாக ஈடுபட்டாக வேண்டும்

**ஆட்சிமொழித் தமிழ் அறிவை மேலிடத்திலிருந்து கொணருவோம்**

நமது தமிழகத்தைப் பொறுத்த வரையில் தற்போது இருக்கின்ற அறிவியல் அறிவு எந்த அளவிற்கு இருக்கிறது என்றால், சீமான் வீடுகளில் இருக்கின்ற குரோட்டன்ஸ் செடியைப்போல வளர்ந்திருக்கிறது. அது செடியாகவோ, கொடியாகவோ, மரமாகவோ வளர வேண்டும் என்ற உயரிய ஒரு கருத்தை நாம் ஏற்றாக வேண்டும். ஆட்சி மொழிச் சட்டத்தை ஏற்படுத்தி பெரும்க்கள் கீழிருந்து மேல் என்று ஒன்றை நிர்மாணித்து விட்டார்கள். ஆனால், அதேநேரத்தில் அது மேலிருந்து வந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று நான் நினைத்துப் பார்க்கிறேன். தலைமைச் செயலாளர் அவர்கள் அங்கே எழுதுகிறார்கள் என்றால், இங்கே கீழே உள்ள ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஒழுங்காக எழுதுவார். நாம்

---

★ **ஒவ்வொரு துன்பமும் ஒரு வழிகாட்டி. இதுவே நன்மை செய்யத் தூண்டுகிறது.**

**—எமர்சன்**

---

என்ன செய்து கொண்டிருக்கிறோம். கீழிருந்து மேலே காத்தடித்துக் கொண்டிருக்கிறோம். மேலிருந்து தள்ளுவதில்லை. ஆக, கீழிருந்து போவதற்குப் பதிலாக மேலிருந்து வரவேண்டும் என்ற ஒரு உறுதியை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**தமிழ் வளர்க்கும் பணி என்ன? தமிழறிஞர்கட்கே உரித்தானதா?**

தமிழை வளர்ப்பது என்பது தமிழறிஞர்களுக்கு மட்டுமே உரிய தொழில் என்று அவர்கள் நினைப்பதும், ஏனைய பேரறிஞர்களும், பெருமக்களும் இதில் நமக்கும் அதற்கும் சம்பந்தம்




தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி





பதிவு எண். M. 8676
icence No.TN/MS(C)/PP-23